உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௭] பிரமாதி ஞு பங்குனி மீ [பகுதி-௫.

Vol. 37. March—April 1940. No. 5.

கம்பராமாயணசாரம்.

[௧௪௨-ஆம் பக்கத் தொடர்ச்சி]

அரக்கப்படைக்கும் குரக்குப்படைக்கும் போர்.

[இவ்வாறு இராமன் விபீடணனை நோக்கிக் கூறிக்கொண்டிருக்கும்போது, இராக்கதசேனை, வானரசேனையை வளைந்து போர் செய்யப்புகுந்தது. அந்தப் போரில், அரக்கர்கள் அம்பு எய்தார்கள். வானரர் கல்லெறிந்தார்கள். அரக்கர் மூளையும் சதையும் இரத்தமும் கலந்து குழம்பாயின. அவர்களது இரத்தவெள்ளத்தில் வானரர் அழுந்தினார்கள். தேர்கள் ஓடின. யானைகள் ஓடின. குதிரைகள் ஓடின. படைஞர் ஓடினர். இரத்த ஆறு ஓடின. தரையிலே கவந்தங்களும் பேய்களும் ஆடின. வானத்திலே கொடிச்சீலைகளும் பறவைகளும் பறந்தன. கும்பகருணன், தேரைச் செலுத்திப் போரைநடத்துவானாகி வானரர்களை மலைகொண்டெறிந்தும், மேலே குதித்தும் மிதித்தும் உதைத்தும் துகைத்தும், ஒரு குரங்கைக்கொண்டு மற்றொரு குரங்கை மோதியும், பல குரங்குகளை வாரி வாயிலிட்டுத் தின்றும் மென்று உமிழ்ந்தும் தலைகளைத் திருகியும் உடல்களைத் தேய்த்தும், பிசைந்து தன் உடலின்மேற் பூசியும், விண்ணில் வீசியும், மண்மீதும் மலைமீதும் மரத்தூர்மீதும் தேர்மீதும் மோதியும், திசைகளெங்கும் சிதறியும் வானரசேனையைச் சின்னபின்னஞ்செய்தான். வானரத்தலைவர்கள் கையிற்பிடித்து

அடித்த மரம்முதலியவைகளையும் வீசியெறிந்த மலைமுதலியவைகளையும் கும்பகருணன் தோண்மேலேற்றான். அடிக்கப்பட்டும் எறியப்பட்டும் தாக்கின மலைகள் மரங்கள் முதலியவைகள் தூள்களாகப்போயின. மரங்களும் மலைகளும் இல்லையாகப் பற்களோடு பற்களைக் கடித்துக்கொண்டு சில குரங்குக் கூட்டங்கள் கும்பகருணன்மேல் முட்டி இறந்திட்டன. குன்றின்மேல்விழும் குருவிக் கூட்டம்போலச் சில குரங்குக்கூட்டம் அவன்மேல் விழுந்து கைகளினாற் புடைத்தும் பற்களினாற் கடித்தும் நகங்களினாற் கிழித்தும் சிறிதும் ஊறிழைக்க இயலாமைகண்டு சிதறியோடின.

நீலன்போர்.

தன் சேனை சின்னபின்னமானதைக் கண்ட சேனாபதி நீலன், வேர் பூமிக்குள் நெடுந்தூரம் புதைந்துகிடந்த ஒரு பெருமலையைப் பேர்த்தெடுத்துச் சுழற்றியெறிந்தான். அதனைச் சூலாயுதத்தால் தூளாக்கிக் கும்பகருணன் குறுஞ்சிறிப்புக்கொண்டான். நீலன் வேறுமலைகளைப் படைகளாகக் கொண்டால் அவைகளும் வீணாமென்று, தன் தோண்மலைகளே பயன்படும் படைகளென்று நினைந்து, கும்பகருணன் தேரைநோக்கி ஓடி, அவன்மீது, இடியோசையும் பின்னிடும் பேரோசையுண்டாகப் பலமுறை கைகளாற் குத்திக் கால்களால் எற்றினான். தன் கைகளும் கால்களும் சலித்ததன்றி வேறு பயன் யாதும் இல்லையென்று தெரிந்து, நெய் பெய்த நெருப்புப்போலக் கொதித்துக் கோபித்துக்கொண்டிருந்த நீலனை, அவனுயிர் பதைக்கும்படி கும்பகருணன் இடக்கையாற் புடைத்தான். நிராயுதன்மீது ஓராயுதமும் பிரயோகிப்பது நியாயமன்றென்று நினைந்து, கும்பகருணன் வெறுங்கையனாயிருந்த நீலன் மீது தாக்குதற்கு வாய்ப்பாகக் கைத்தலத்திருந்த முத்தலைச்சூலத்தைப் பாய்ச்சாதுவிட்டான்.

அங்கதன்போர்.

அப்போது, அங்கதன், (இப்போது நாம் குறுக்கிடவில்லையானால், கும்பகருணன் நீலனைக் கொன்றுவிடுவான் என்றெண்ணி) ஒரு பெருமலையை (அதனைச் சுமந்துகொண்டிருந்த) பூமி முது

காற்றும்படி பேர்த்தெடுத்து, ஏழுலகத்தோரும் 'இறந்தான் கும்பகருணன்' என்று கூறி வாழ்த்தெடுக்க, கும்பகருணனைக் குறித்து எறிந்தான். அவன் அதனை ஒரு தோளில் ஏற்றான். ஏற்கவே அந்த மலை எண்ணரிய நுண்ணிய தூளாய் ஒழிந்தது. அதனைக் கண்ட அங்கதன், அஞ்சானாய்க் கும்பகருணனைக் கொன்றேவிடுமென்றெறிந்த குன்று ஒன்றுஞ் செய்யாதொழிந்ததென்பதனால் உண்டான கோபமும் தானுமாக(க் கோபமே உருவெடுத்தாற் போன்று) முன்வைத்த காலைப் பின்வைக்காமல் நின்றான். கும்பகருணன், தடுக்கமுடியாத வயிரத்தண்டை எடுத்து. 'அவன் உயிரை அழிப்பாயாக' என்று கூறி எறிந்தான். அங்கதன், அதனைக் கையாற் பிடித்துக்கொண்டான். அதுகண்ட அமரர்கள் ஆச்சரியபரவசராய் அவனை வாழ்த்தினார்கள். அவன் தன்கையிற் பிடித்த தண்டைச் சுழற்றி, அனற்பொறி பறக்கப் பார்த்து ஆர்த்து, 'இந்தத் தண்டுகொண்டடித்து அவனுயிர் குடிப்பேன்' என்று கூறிக் கும்பகருணன்தேர்முன்னே குதித்து எதிர்த்துநின்றான்.

அங்கத கும்பகருண சம்வாதம்.

அவ்வாறு நின்ற அங்கதனைக் கும்பகருணன் கோபித்துப் பார்த்து, (சாமானிய வானரனல்லனென்று கருதி) 'நீ, சுக்கிரீவனோ, அங்கதனோ, அனுமானோ யாரோ, சொல்' என, அங்கதன் 'உன் தமையனை வாலினாற் சுற்றியபடியே நாலுதிக்குஞ் சென்று ஈசனைப் பூசனைசெய்த வாலியின் மகன் நான். உன்னை வாலிற் கட்டிச் சென்று இராமன்பாதங்களில்வைத்து வணங்குவேன்' என, கும்பகருணன், 'உன் தந்தையை மறைந்துநின்று, அம்பெய்து ஆருயிர் கொண்டு பேருதவிசெய்தவனுக்கு நீ அவன்பகையை அழித்து மாறுதவிசெய்வாயானால், உலகோர் உன்னை நிந்திப்பார்கள். (பகைவனது பகையை அழித்தலாகிய) நல்லகாரியஞ்செய்யக் கருதினாய். இதற்காக வீரராயுள்ளார் உன்னை வந்திப்பார்கள்.*

* 'உன் தந்தையைக்கொன்று உன்திறத்து அபகாரஞ்செய்தவனுக்கு நீ உபகாரஞ்செய்ய முயல்வதனால், உன்னை உலகோர் நிந்தனைபுரிவர். வீரரானவர் உன்னை, அவமதிப்பர். நீ நினைத்தசெயல் நல்லதன்று' என்பது கருத்து. இங்கே, கும்பகருணன் அங்கதனைப் புகழ்வதைப்போல இகழ்ந்திருத்தல் கவனிக்கத்தக்கது.

நீ, இங்கே வந்தது, என்னை வாலிற்கட்டி, இராமனிடம் சேர்த்தற் கன்று; என் முத்தலைச்சூலம் உன் மார்பிற்பாய்ந்து முதுகின்வழி யாய் வெளியாக உயிரிழந்து வால்போலக் கால்களும் கைகளும் தொங்கிக்கிடத்தற்காம்' என்றான்.

அங்கதன் தோல்வி.

உடனே அங்கதன் கோபித்து, மலைமேல் இடிவிழும்போது உண்டாகும் ஓசைபோன்ற பேரொலியுண்டாக, கும்பகருணன் தோள்மீது தன்கையிலிருந்த வயிரத்தண்டுகொண்டு ஓங்கியடித் தான். அது நூறுகூறாய் நொறுங்கியது. உடனே, அங்கதன், கைகளை உயர்த்திக் கும்பகருணனைக் குத்திக்கொல்லக் குனிந்த போது, அங்கதன் தன்னைக் குத்துமுன், கும்பகருணன், அவனைக் குத்த, அவன் கீழே விழுந்தான்.

அனுமான் போர்.

(முன் கும்பகருணனால் நீலன் பிராணாபாயத்துக்குள்ளான போது, அங்கதன் குறுக்கிட்டுதவியதுபோல, இப்போது,) கீழே விழுந்துகிடந்த அங்கதன்மேலே சூலாயுதத்தைக் கும்பகருணன் எறியத்தொடங்கியபோது, அனுமான், அவன் நெற்றிமுற்றும் பொத்தித்தாக்கும்படி ஒரு மலையை எறிந்து 'இராமன் வாழ்க' என்று வீர ஆரவாரஞ்செய்தான். (மலைபோன்ற) கும்பகருணன் தலையைத்தாக்கி (அவனுக்குத் தலை யிரண்டென்னும்படி) வேறொரு தலைபோலிருந்த அந்த மலையைக் கையாலெடுத்து உலைக்கூடத்தின் மீது சம்மட்டி அடித்தாற்போல அந்த மலையை அனுமான்மார்பு மீது தாக்கும்படி வீசியெறிந்து, கும்பகருணன் தோள்கொட்டி, வீரமுழக்கஞ்செய்தான். அப்போது, வானரவீரர் மூர்ச்சித்துக் கிடந்த அங்கதனைத் தூக்கிக்கொண்டுபோனார்கள்.

அனுமான் கூற்றும் அதற்குக் கும்பகருணன் விடையும்.

அனுமான், மிகப்பெரிய ஒருமலையைப் போர்த்தெடுத்துப் பிடித்துக்கொண்டு, 'கும்பகருணா! உன்மேல் இதனை எறியப் போகிறேன். இதனால் உன்வலி இமைப்பொழுதில் ஒழிந்திடும்.

உன்வலி ஒழியாமல், நீ இதனை ஒழித்திடுவாயானால், உன்வல்லமை உலகப்பிரசித்தமானதாம். பெரும்புகழ்பெறுவாய். யான் உன்னோடு இனி என்றும் போர்செய்யேன்' என்றான். கும்பகருணன், மலைக்குகைதிறந்தாற்போல, வாய்திறக்கச் சிரித்து, 'இந்த மலையை யான் எதிரேற்றகாலத்தில் ஒருசிறிது சோர்வுற்றேனென்றாலும் உனக்குத் தோற்றவனாவேன். உன்னை வலியன் என்றும் என்னை மெலியன் என்றும் ஒப்புக்கொள்வேன்' என்றான்.

அனுமான் மலையை எறிய அது பொடியாக அவன் அப்பாற் போதல்.

அனுமான், 'இதனைத் தாங்கவல்லையாகில் நில்; வல்லையல்லையாகில் செல்' என்றுகூறி, எறிந்த மலையைக் கும்பகருணன் எந்த ஆயுதங்கொண்டுந் தடாமல், தன்தோண்மேலேற்றான். அது, பல சுக்கலாய்ச் சிதறிவிட்டது. கும்பகருணன் சிறிதும் தளராது நின்ற தன்மையைக்கண்டு, 'இவன் வல்லமை, சொல்லுந்தரமன்று. இவன்தோள்களைப் பிளக்கவல்லது யாதேனுமிருந்தால், அது, இராமபாணமே' என்று கருதி அனுமான் அப்பாற்போனான்.

கும்பகருணன் வெற்றி.

'இறந்தவைபோக எஞ்சிய வானரப்படையெல்லாம் இன்றே இவன் சூலப்படையால் இறந்தொழியும்' என்றுகூறி, இமையவர்கள், ஏங்கி நடுங்கினார்கள். வானரவீரர்கள், கும்பகருணனைத் தாக்கினவர்கள், சலித்தார்களேயன்றி அவனை அசைக்கமுடியவில்லை. அவன் சிறிதும் நோவுற்றானில்லை. போர்க்களத்தில் ஒரு குரங்குமில்லாதபடி ஓட்டிவிட்டு, 'எல்லாக் குரங்குகளையும் தொலைத்துவிட்டேன். இனித் தொலைக்கவேண்டியவர்கள் இராமலக்குமணரே; அவர்கள் எங்கேபோனார்கள், எங்கேபோனார்கள்' என்று கூக்குரலிட்டுக் கூவித் தோள்கொட்டிக் கொக்கரித்தான் கும்பகருணன்.

இலக்குமணன் போர்.

அன்றைய ஒருநாட்போரில் வானரசேனை பாதிக்கும் அதிகமாக அழிந்ததென்று கூறிக்கொண்டு வந்தான் இலக்குமணன்.

90 நாணெ றிந்தனன் சிலையினை யரக்கியர் நகுபொற்
பூணெ றிந்தனர்[1] படியிடை யிடிபொடித் தென்னச்
சேணெ றிந்தன[2] திசைசெவி டெறிந்தன வலகை
தூணெ றிந்தன கையெடுத் தாடின துணங்கை.

கொண்டுகூட்டு: (இலக்குமணன்) சிலையினை நாண் எறிந்தனன். *அரக்கியர் நகு பொற் பூணைப் படியிடை எறிந்தனர். சேண் நெறிந்தன (ஆன) திசை செவிடெறிந்தன. அலகை தூண் எறிந்தன கை யெடுத்துத் துணங்கை யாடின.*

பொருள்: (இலக்குமணன், தன்) வில்லின் நாணைத் தெறித்தான். *(அதனால் உண்டான ஓசையைக் கேட்ட இலங்கையில் உள்ள) இராட்சசிகள் (இப்படிப்பட்ட ஓசையை உண்டாக்கும் வில்லின் அம்புகள் போர்க்களத்துக்குப்போன தம் புருடர்களைக் கொன்றே விடுமென்று கருதி, அப்புருடர் இறந்தபின் அவர்கள் கட்டிய இவைகள் இருப்பானேன் என்று தம் கழுத்தினின்று இழுத்து அறுத்த) தாலிகளைத் தரையில் எறிந்தார்கள். (இடிபிடித்தாற் போல உண்டாகிய அந்த ஓசையால்) திசைகள் செவிடுபட்டன. (இப்படிப்பட்ட வில்லினின்று புறப்படும் அம்புகளால் இராக்கதர் எண்ணிறந்தவர் இறந்திடுவார்கள். அவர்கள் மாமிசத்தை நாம் நிரம்ப உண்ணலாமென்ற மகிழ்ச்சியால்) பேய்கள் கைகள் (முடக்கி) உயர்த்தி (விலாவில் அடித்துக்கொண்டு அசைந்து ஆடும்) துணங் கைக்கூத்தாடின.*

நாண் - வில்லின் நாண். நாண் எறிதல் - வில்லின் நாணை விரல்களாற் பிடித்திழுத்து ஓசையுண்டாம்படிவிடுதல். சிலை - வில். 'நகு (—விளங்கு கின்ற) பொன்(னாற் செய்யப்பட்ட) பூண் (—ஆபரணம்), தாலியைக்குறிப் பித்தது. படியிடை - பூமியிடத்தே. பொற்பூணைப் படியிடை எறிந்தன ரெனக் கூட்டுக. இடிபொடித்தென்ன - இடியுண்டானாற்போல. 'புளகம் பொடித்தல், முலைபொடித்தல்' என்பவற்றிற்போல, இங்கே 'பொடித்தல் - உண்டாதல்' என்ற பொருள் தந்துநின்றது. நெறிந்தன - வளைந்தன. சேண் நெறிந்தன - ஆகாயத்தால் வளையப்பட்ட. செவிடெறிதல் - செவிடுபடல்; (சத்தமிகுதியால்) காதுகேளாதுபோதல். அலகை - பேய். துணங்கை - முடக்கிய இருகைகளையும் விலாப்புடைகளில் ஒற்றி அடித்துக்கொண்டு அசைந்தாடும் ஒருவகைக் கூத்து (தமிழகராதி).

பாடபேதம்: [1] *பூணெறிந்தன.* [2] *சேணெறிந்தெழு.*

[வில்நாணொலி யெழுப்பியபின், இலக்குமணன், இராக்கத சேனையைக் குறித்து, அம்புகளைத் தொடுத்துவிடுத்தான். அந்த அம்புகளால், தேர்கள், அவைகளிற் சென்ற வீரரோடு பாகரும் குதிரைகளும் மடிந்தும், ஓடும் இரத்த ஆறுகளால் இழுப்புண்டோடியதனால், ஓடுதல் ஒழியவில்லை. அந்த அம்புகளால் யானைப் படை குதிரைப்படை காலாட்படைகளும் சேதிக்கப்பட்டன.

நல்வினைமிக்காரெனினும் தீவினைமிக்காரெனினும் இருவினையொப்புவாய்ந்து தத்துவஞானமுற்றவர், முத்திபெற்றவராதல் போல, போர்புரிந்து சாவடைந்தவர் நல்லாரெனினும் பொல்லாரெனினும் வீரசுவர்க்கம் உறுவர் என்பதன் உண்மையை (இது வரை கேட்டறிந்தோம்; இலக்குமணனை எதிர்த்து அவன் அம்பு பட்டிறந்த தீய இராக்கதர், தம்மை எதிர்கொண்டழைக்க வந்த அரம்பையரால் விரும்பித் தழுவப்பெற்று வீரசுவர்க்கத்துக்குச் செல்லும் காட்சியினால், இப்போது) நேராகக் கண்டறிந்தோம். இவ்வாறாகத் தீயோருக்கும் இடங்கொடுத்து இன்பங்கொடுக்கும் வீரசுவர்க்கத்தினும் மேம்பாடுடையது வேறு யாதேனும் ஒன்றுண்டென்று விளம்பவல்லேமல்லேம்.

தருமதேவதையின் அருமையான இன்னுயிரேபோன்ற இலக்குமணன் எய்யும் கணைகளுக்கு எதிர்நின்றால், இறந்தேபோவமென்றெண்ணி, இராக்கதர்கள், அந்தப் போர்க்களத்தினின்று ஓடிய இரத்த ஆறுபோல, ஓடிப்போனார்கள்.

அதுகண்ட கும்பகருணன், போரில் இறந்தவர்களது மிகுதிப்பாட்டையும் இலக்குமணன் விற்றொழிலினது தகுதிப்பாட்டையும் நோக்கி, வியந்து 'ஒப்பற்ற வில்லாளர், திரிபுரமெரித்த சிவனும் இவனுமே' என்று, ஒருமுறையன்று, இருமுறையன்று, மும்முறையுமன்று, பன்முறை பாராட்டினான். அவன், இலக்குமணனிருந்த இடத்துக்குத் தன்தேரைச் செலுத்தினான். கும்பகருணன் ரதிக*னாகவும் இலக்குமணன் பதிக†னாகவும் பொருதல் பொருத்தமன்றென்றெண்ணி, அனுமான் இலக்குவனைத் தன்

---

* ரதிகன் - ரதாரூடன். † பதிகன் - பாதசாரி.

தோண்மீது ஏறும்படி வேண்ட, இலக்குமணன் ஏறினான். ஏறிய போது தோன்றிய காட்சி, வெள்ளிமலைமீது பொன்மலை விளங்கி னாற்போன்ற தோற்றத்தை ஒத்தது.

கும்பகருணன்,தோளில் அம்பறாத்தூணியைக் கட்டிக் கையில் வில்லைத்தாங்கிப் போர்புரிதற்கு ஆயத்தமானான்.

இலக்குமணனுடன் போர்புரிதற்குப் பூர்வாங்கமாகக் கும்பகருணன் கூறிய வீரவாதம்.

கும்பகருணன், இலக்குமணனைநோக்கி, 'இராமன்தம்பி நீ, இராவணன்தம்பி நான். இருவேமும் பொருவேமானேம். நமது போரைக் காண வானவர்கள் வந்திருக்கின்றார்கள். போர்முறைப்படி நாமிருவரும் நமது வலிமைக்குரியவற்றைக்கூறிப் போர்புரிவோ மாக' என்று பின்வருமாறு கூறுவானானான்.]

91 பெய்த வத்தினோர் பெண்கொடி யெம்முடன் [1]பிறந்தாள்
செய்த குற்றமொன் றில்லவ ணசிவெஞ் சினத்தாற்
கொய்த கொற்றவ! மற்றவள் கூந்தறொட் டீர்த்த
கைத லத்திடைக் கிடத்துவன் காக்குதி யென்றான்.

கொண்டுகூட்டு: 'பெய்தவத்தின் ஓர் பெண்கொடி, எம் உடன்பிறந் தாள்; செய்த குற்றம் (யாது) ஒன்று(ம்) இல்லவள், (அவள்) நாசி(யை) வெஞ்சினத்தால் கொய்த கொற்றவ! அவள் கூந்தல் தொட்டு ஈர்த்த கை (யைத்) தலத்திடைக் கிடத்துவன் காக்குதி' என்றான்.

பொருள்: '(எங்கள் முன்னோர் செய்த) தவத்தினால் ஒரு பெண் எங்களோடு பிறந்தாள். ஒரு குற்றமும் செய்யாதவள். (அந்தப் பேதை) மூக்கை வெஞ்சினங்கொண்டு அரிந்த வெற்றி யாளனே! (கேள்.) அவளுடைய கூந்தலை (மரியாதையுணர்ச்சி யின்றி)த் தொட்டு இழுத்த கையை (அறுத்துத்) தரைமேலே கிடத்தப்போகின்றேன். (உன்னால் தடுக்கமுடியுமானால்) தடுத்து (காத்து)க் கொள்' என்றான்.

பெய்தல் - கொடுத்தல் (தமிழகராதி.) பெய்தவம் - (கடவுளர்க்குப் பிரீதியாகச் செய்து அவர்களுக்கு அர்ப்பணமாகக்) கொடுத்த தவம். ஐயம் (-பிச்சை) பெய்தல் (- கொடுத்தல்) என வருதல் காண்க. கொய்தல் - அரிதல்; அறுத்தல். கொற்றவன் - வெற்றியாளன். ஒரு பெண்ணின் (அதுவும் ஒரு குற்றமற்ற பெண்ணின்) நாசியை அரிதல் வீரராயுள்ளார்க்கு அவமதிப்பையுண்டாக்கி வெட்கம்விளைக்கும் இழிசெயலென்பது புலப்பட வாயாற் புகழ்வான்போன்று மனத்தால் இகழ்ந்து, வஞ்சப்புகழ்ச்சியாகக் 'கொற்றவ' என விளித்தான். காக்குதி - காத்து(- தடுத்து)க் கொள்வாயாக.

பாடபேதம்: [1] எம்முழை, எங்களிற்.

இலக்குமணன் எதிர்மொழி.

92 அல்லி னற்செய்த நிறத்தவ னனையது[1] பகர[2]
மல்லி னற்செய்த தோளினன்[3] மாற்றங்க ணும்பால்[4]
வில்லி னற்சொலி னல்லது[5] வெந்திறல் வெள்கச்
சொல்லி னற்சொலக் கற்றில மியாமெனச் சொன்னான்.

கொண்டுகூட்டு: அல்லினால் செய்த நிறத்தவன் (கும்பகருணன்) அனையது பகர, மல்லினால் செய்த தோளினன் (இலக்குமணன்), 'யாம், நும்பால் மாற்றங்கள் வில்லினால் சொல்லினல்லது, வெம் திறல் வெள்கச் சொல்லினால் சொலக் கற்றிலம்' எனச் சொன்னான்.

பொருள்: கும்பகருணன், மேலே கூறியதைக் கூற, (அதைக் கேட்ட) இலக்குமணன், '(மானுடரான) நாங்கள் (இராக்கதரான) உங்களிடம் பேசுவதானால், அந்தப் பேச்சு வில்லினால் (அம்பு எய்வதே பேசுவதாகப்) பேசினால் (பேசலாமே) அன்றிச் சொல்லினால், (பேசினால், வீரதேவதை வெட்கமடையும். அவ்வாறு) வீர(த் தெய்வ)ம் வெள்கும்படி பேசுவதை யாங்கள் கற்கவில்லை' என்றான். (வார்த்தைக்கு மறுவார்த்தை, வார்த்தையன்று, அம்பே என்றவாறு.)

அல் - இருள். அனையது, கும்பகருணன் மேலேகூறியதைக் குறித்தது. மல் - மற்றொழில் - மல்யுத்தம். மல்லினால் செய்த தோள் - வலிமையுடைய தோள்; மற்றொழிற் பழக்கமுடைய தோள். மாற்றம் - வார்த்தை. நும்பால் - உங்களிடத்தில். திறல் - வலி; வெற்றி. இங்கே வலியைச் செலுத்தி வெற்றியையடைதற்குக் காரணமான வீரத்தைக் குறித்தது. வெள்க - நாண.

'வில்லினாற் சொல்வதல்லது........சொல்லினாற் சொலக்கற்றிலம்' என்ற பாடத்துக்கு, 'வில்லினாற் சொல்வதைக் கற்றிருக்கின்றோமேயன்றிச் சொல்லினாற் சொல்வதைக் கற்கவில்லை' என்பது பொருளாம்.

பாடபேதம்: [1] ஆங்கது, ஆங்கிவை. [2] செப்பு. [3] புயத்தவன். [4] உன்பால். [5] சொல்வதல்லது.

இலக்குமண கும்பகருணர் போர்.

[மண்ணும் விண்ணும் இவ்விரண்டு* கூறுகளாகும்படியாகவும் பெரியமலைகள் பிளக்கும்படியாகவும் பதினெட்டுப் பாணங்களைக் கும்பகருணன் ஒருதொடுப்பில் தொடுத்துவிடுத்தான். அந்த அம்புகளை, இலக்குமணன், நான்குகணைகளால் அறுத்தான். பிரமதேவனால் பிரசாதிக்கப்பெற்றதும் அமரரை அடக்கியதும் ஆயிரவடிவுடையதுமான பாணத்தையெடுத்து அதனில் அதற்குரிய தேவதையை ஆவாகித்து, 'இதனை விலக்கவல்லையேல், விலக்குவாயாக' என்றுகூறி, வில்லிற்றொடுத்து விடுத்தான், கும்பகருணன். அதற்கெதிராக, இலக்குமணன், ஒரு தெய்விக அம்பைச் செலுத்தி அதை அறுத்தான். கும்பகருணன், பன்னிரண்டு பாணங்களை அனுமான்மேல் அழுந்தச்செய்து, இரண்டு கணைகளை இலக்குமணன்மேற் செலுத்தி, நூற்றைம்பதம்புகளால் ஆகாயமும் திசைகளும் மறையச்செய்தான். இலக்குமணன், மறைத்த அம்புகளை மாற்றம்புகளால் மாற்றி, வேற்றம்புகளால் கும்பகருணன்தேரிற் பூட்டியிருந்த சிங்கங்கள் யானைகள் குதிரைகள் பூதங்களாகியவைகளைத் தொலைத்துத் தேரையும் சிதைத்தான். மேலும் வெங்கணைகள் விடுத்துத் தேர்ப்பாகனையும் கும்பகருணன் வில்லையும் துண்டித்தான். தீவிரவேகமாகத் தேர்முதலியவை சிதைக்கப்பட்டதைநோக்கி, இச்சிதைவு கைச்சாபத்†தாலோ வாய்ச்சாபத்தாலோ ஆகியதென்று தேவர்கள் திகைத்தார்கள்.

தேரும் வில்லும் அற்ற கும்பகருணன், இதனால் இவனைக் கொல்வேன் என்று, மூன்றுலகையும் வென்றதற்கடையாளமாக மூன்று தலைகளையுடையதாயிருந்த சூலமாகிய காலனைக் கையிற் கொண்டான். அவன் தேரிழந்து பாரில் நின்றதுகண்டு, அனுமான்

* இவ்விரண்டு - இரண்டு இரண்டு - தனித்தனி இரண்டு. † சாபம் - வில்.

மேலிருந்து அவனோடுபொருதல் அறமன்றென்று இலக்குமணன், தானும் தரையில் நிற்பானானான். அப்போது, இராவணன் கும்பகருணனுக்குதவியாக அனுப்பிய பெரும்படைவந்து இலக்குமணனைச் சூழ்ந்துநின்று போர்முழக்கம்புரிந்தது. இலக்குமணன், அந்த இராக்கதப்படையை எதிர்த்து, அம்புகளெய்து யானையின் கைகளும் குதிரையின்கால்களும் தேர்ச்சக்கரங்களும் அரக்கர் தலைகளும் அறுபடச்செய்ய, அறுப்புண்ட உறுப்புக்களினின்று ஒழுகும் இரத்தவெள்ளம், பிணப்பெருங்குவியல்களாலான கரைகளைக் கடக்கமாட்டாமல் தடைப்பட்டது. இராக்கதர் எறிந்த வாள்கள் இருப்புலக்கைகள் தண்டுகள் வேல்கள் முதலியவைகளை இலக்குமணன் அம்புகளால் அறுக்க, அவைகள் அங்கங்கே துண்டுதுண்டுகளாய் விழுந்தன.

கும்பகருண சுக்கிரீவர் போர்.

உதவிக்குவந்த இராட்சசசேனை இலக்குமணனால் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது, கும்பகருணன், வேறோரிடத்தில் நின்றான். அங்கே அவனுக்கும் சுக்கிரீவனுக்கும் போர் மூண்டது. சுக்கிரீவன் ஒரு பெருமலையைப் பிடுங்கிக் கும்பகருணன்மேலெறிந்தான். அதனைக் கண்டவர், கும்பகருணன்தோள் ஒடிந்தேபோம் என்றெண்ணினார்கள். அதைக் கும்பகருணன் ஒருகையால் ஏற்றுப் பிசைந்து தூளாக்கித் தூற்றினான். சுக்கிரீவன் வேறொருமலையைத் தெரிந்தெடுத்து எறிய எண்ணிக்கொண்டிருக்கும்போது, அவன் மீது, கும்பகருணன் 'கொன்றிடுவாயாக' என்றுகூறி, ஒருசூலத்தை யெறிந்தான். கண்டவர் சுக்கிரீவன் 'செத்தான் செத்தான்' என்று கதற, அந்தச் சூலாயுதம் ஆகாயத்திற் செல்வதை அனுமான் எட்டிப்பிடித்து ஒடித்து எறிந்தான். அனுமான் சூலத்தை ஒடித்த ஓசை, இராமன் மிதிலையில் வில்லை*முறித்த ஓசையை ஒத்தது. கும்பகருணன் அதிசயபரவசனாய் அனுமானைநோக்கி, 'உன் கைவலி உரைத்தற்கரியது. உன்னுதற்குமே அரியது. செய்தற்கரிய செயல்களைச் செய்துமுடித்தற்கு, உலகமுழுவதிலும் ஒரு தனியனாயுள்ளாய்; (உன்னோடு பொருவதேபோர். நீ முன்

* சீதாகல்யாண சுல்கமாக வைத்திருந்த வில்.

என்னொடு செய்தபோரை இடையில் நிறுத்திவிட்டாய்) இன்னும் என்னொடு பொருவாயானால், நீ நியமிக்கும் போர்முறைமைப்படியே பொருவேன்' என்றான். 'இனி உன்னோடு போர்புரியேன்' என்று முன்னே முடிவுசெய்துள்ளேன். ஆதலால் இப்போது பொருதல் தவறும்' என்று அனுமான் அகன்றுபோனான்.

சூலம் முறிந்தபின் நிராயுதனாய்நின்ற கும்பகருணன்மீது சுக்கிரீவன்பாய்ந்து அடித்துக் குத்தினான். அவன், 'உன் ஆண்மை சிறந்ததே; ஆயினும், அது இன்றோடு முடிந்திடும்' என்று கூறினான். இருவரும், பொருபவராய், ஒருவரையொருவர் பற்றமுயல, இருவரும் இடங்கொடாராய், மிகுவேகமாக, இடசாரி வலசாரியாகத் திரிந்தார்கள். போர்காண்போர் எவன் கும்பகருணன், எவன் சுக்கிரீவன்: என்று தெரியமாட்டாராய்த் திகைக்கும்படிசெய்தது, அவர்கள் திரிந்தவேகம். முடிவில், கும்பகருணன் சுக்கிரீவனைப் பிடித்திழுத்துப் பொறுக்கமுடியாதபடி இறுக்க, அவன் அறிவு நீங்கினான்.* கும்பகருணன், 'இன்றோடு போர்முடிந்திடும்; அரசனில்லாத படை சிதறியொழியும். இவனை நம்மூர்க்குக் கொண்டு போய்விடுவோம். செய்தற்குரிய சிறந்தசெயல் இதுவே' யென்று எண்ணிச் சுக்கிரீவனைத் தூக்கிக்கொண்டு இலங்கைக் கேகினான். தாய்ப்பறவையை வல்லூறுபற்றிச் செல்லக் கண்ட குஞ்சுக்கூட்டம் கூக்குரலிடுதல்போலக் குரங்குப்படை அலறியது. படைத்தலைவர்கள் வாய்புலர்ந்து கண் இடுங்கிக் கருத்தொடுங்கிப் பிரமித்துநின்றார்கள். வெண்ணிறமுள்ள சுக்கிரீவனைப்பற்றிய கருநிறமுடைய கும்பகருணன், வெண்மதியைப்பற்றிய கரிய இராகுவை† ஒத்தான்.

* இலங்கைப்போர்தொடங்குமுன் வெல்லலும் தோற்றலுமின்றி மல்லயுத்தஞ்செய்து இராவணனோடு சமபலமுடையவனாயிருந்த சுக்கிரீவனை மற்போரில் வென்றதனால், கும்பகருணன் இராவணனுக்கு உடன்பிறப்பிலே பின்னோனேயன்றி உடற்றிறத்திலே முன்னோனே: என்பதும், அவனுடைய ஒப்பற்ற உடல்வலிமையை அறிந்துவைத்தே அவனைப் போர்க்கு அனுப்பினால் வெற்றி நிச்சயமென மகோதரன் இராவணனுக்கு ஆலோசனை கூறியதும், திக்குவிசயஞ்செய்து திரிலோகாதிபதியான தன்னைவென்றவரையும் வெல்லவல்லனென்று கருதிக் கும்பகருணனை இராவணன் போருக்கு அனுப்பியதும் போதரும்.

† கிருகணசர்ப்பம், கரும்பாம்பு என்பவை இராகுவின் பரியாய நாமங்கள்.

தான்செய்த சபதத்தாற் கும்பகருணனோடு போர்செய்யமுடியாத அனுமான் செய்வதின்னதென்று தெரியாது திகைத்துக் கை பிசைந்து* பின்சென்றான்.

சுக்கிரீவன் அபாயநிலையை வானரர் இராமனுக்குத் தெரிவித்தல்.

அப்போது, வானரர் இராமன்காலில்விழுந்து கதறி, 'சுக்கிரீவனைக் கும்பகருணன் தூக்கிக்கொண்டுபோகின்றான். இனி எங்களுக்கு நாயகர் யார்' என்று ஓலமிட்டார்கள்.

இராமன் சரக்கூடங்கட்டி இலங்கைக்குச் செல்லும்வழியை அடைத்தல்.

இராமன், கொடுங்கோபங்கொண்டு, வில்லும் அம்பும் ஏந்தி, இலங்கைவாயிலைநோக்கிச் சென்றான். சென்றவன், உயிர்போலும் துணைவன் ஊருக்குள்ளே கொண்டுபோகப்பட்டுவிட்டால், பெருங் கேடுநேருமென்று கருதி, 'அம்புமழையால் ஆகாயவழியனைத்தும் அடைப்பேன்' என்று சரக்கூடங்கட்டினான். சுக்கிரீவனைக் கொண்டு வான்வழியேபோன கும்பகருணன், அம்புமதிலைக் கிட்டி, இது நீக்கரிதென்று நினைத்துத் திரும்பிப்பார்த்தான்.]

93 கண்டனன் வதனம்வாய் கண்கை காலெனப்[1]
புண்டரீ கத்தடம் பூத்துப்[2] பொற்சிலை[3]
மண்டலந் தொடர்ந்துமண்[4] வயங்க வந்ததோர்
கொண்டலிற் பொலிதரு கோலத் தான்றனை.

கொண்டுகூட்டு: வதனம் வாய் கண் கை கால் எனப் புண்டரீகத் தடம் பூத்து மண்டலப் பொற்சிலை தொடர்ந்து மண்வயங்க வந்தது (ஆகிய) ஓர் கொண்டலிற் பொலிதரு கோலத்தான்றனை (இராமனை)க் கண்டனன் (கும்பகருணன்).

பொருள்: முகம் வாய் கண் கை கால் எனத் தாமரைப்பூக்கள் பூத்து(த் தன்னோடு - மேகத்தோடு - விண்ணிலிருந்த) அழகிய வட்டவடிவான (வான) வில் தொடரப்பெற்றுப் பூமியில் விளங்க வந்த மேகம்போல மிளிர்கின்ற வடிவமுடைய இராமனைக் கண்டான் (கும்பகருணன்).

---

* கைபிசைதல், செய்வதறியாது திகைப்பார் மெய்ப்பாடு.

புண்டரீகம் - வெண்தாமரை: இனம்பற்றிச் செந்தாமரையை உணர்த்தியது. திருவவதாரப்படலத்தில் 'கருமுகில் தாமரைக்காடுபூத்து' என்பதில் 'தாமரைக்காடு' போலப் 'புண்டரீகத்தடம்' தாமரைப்பூத்தொகுதியை உணர்த்திபது. பொற்சிலை - அழகு (உடைய) வில். மண்டலம் - வட்டம்' வயங்க - விளங்க. கொண்டல் - மேகம். பொலி - விளங்கு. தரு, துணைவினை. கோலம் - உருவம்.

'புண்டரீகத்தடம் வதனம் வாய் கண் கை கால் எனப்(பூக்கள்) பூத்துப் பொலிதரு கோலத்தான்தனை, மண்டலம் பொன்சிலை தொடர்ந்து மண்வயங்கவந்ததோர் கொண்டலிற் பொலிதரு கோலத்தான்தனைக் கண்டனன்' என இயைத்தும் பொருள்கொள்ளலாம். இப்படி இயைப்பதில் 'கொண்டலின்' என்பதனை இடையீடின்றி அடுத்துப் பொருந்தியிருக்கிற 'பொலிதரு கோலத்தான்தனை' என்பதனைத்தானே திரும்பவும் 'பூத்து' என்பதனோடும் பொருத்தியிருப்பது குறித்துக்கொள்ளத்தக்கது.

பாடபேதம்: [1] காலினப். [2] பூத்தொர், பூத்து, பூத்த. [3] வார்சிலை • [4] வான், மின், பின்.

[(குளிர்ச்சியளிக்கும் மேகம்போன்று யாரையும் மனங்குளிரச் செய்யும் இராமன்வடிவம், கும்பகருணனுள்ளத்தைக் கொதிக்கச் செய்து கொடுங்கோபம் உண்டாக்கினது. அதனால்) அவன், வாய் மடிக்க, இதழ்கள் துடிக்க, புருவங்கள் நெரிக்க, கண்கள் தீப் பொடிக்க அதட்டி, ஆரவரித்து, 'நான், நீ கொன்ற கவந்தன் வாலி என்பவர் போல்வேன் என்று கருதி, என்னைத் தாக்கி, இவனை (சுக்கிரீவனை) மீட்கவந்தாய். நான் உன் தம்பியையோ அனுமனையோ இந்தச் சுக்கிரீவனையோ பொருட்படுத்திக் கோபிக்கவில்லை. இவர்களைக் கோபிப்பது, எனக்குப் புகழ்ச்சியாகாது. இகழ்ச்சியேயாம். உன் படை ஓடிவிட்டது. உன் தம்பி ஒருபக்கம் ஒதுங்கிப் போனான். அனுமன் ஆற்றலற்று அமர்செய்தற்கு அஞ்சி அகன்றொழிந்தான். உன்னைத் தேடினேன். தென்பட்டாயில்லை. என்னை எதிர்த்துப் பொருது வலியொடுங்கிய இவனை எளிதாக எடுத்துக் கொண்டு ஓடுகிறேன். இவனை நீ காக்கக்கருதிவந்திருக்கின்றாயென்றால், அப்படிவந்த (தேடிக்காணப்படாதிருந்த) உன்னை யான்

கண்டது, என் பாக்கியப்பயனே. இனி, என் போர்த்திறமை யெல்லாங்காட்டி (உன்னை வென்று) என் தமையன் இராவணன் மனத்துன்பத்தை மாற்றுவேன். உன் வில்வித்தையினால், இந்தக் குரங்கை நான் பிடித்திருக்கின்ற பிடியினின்று விடுவிப்பாயானால், சீதையைச் சிறையினின்று விடுதலைசெய்தாயாவாய்' என்றான். இராமன், 'என் தோழன் சுக்கிரீவனைத் தூக்கிய தோள்களைத் துண்டியே னானால், உனக்கு நான் தோற்றவன் ஆவேன். பிறகு வில்லைப் பிடிப்பதில்லை' என்று சூளுரைத்தான். கும்பகருணன் அம்புமதிலை அகற்றும்பொருட்டு முயற்சிசெய்யும்போது, அவன் நெற்றியிலே இரண்டு கணைகளை இராமன் எய்தான். அம்பு துளைத்த புண்களி னின்று பெருகிய இரத்தம் முகத்தை நனைக்க, மூர்ச்சை தெளிந்த சுக்கிரீவன், எதிரி நெற்றியிற் காணப்பட்ட கணை இராமபாணம் எனத் தெரிந்து, மகிழ்ந்து, எய்த இராமன் எங்குளான் எனச் சூழப் பார்த்துக் கண்டு தெண்டனிட்டான். தெண்டனிட்டவன் தான் எதிரிவசமாயிருந்ததை யெண்ணி வெட்கமடைந்து, எதிரியின் மூக்கைக் கடித்தும் காதைக் கிள்ளியும் பறித்துக்கொண்டு தன்னவ ரிருந்த இடம் போய்ச்சேர்ந்தான். வானரரும் வானவரும் மகிழ்ந்து களிமுழக்கஞ்செய்தார்கள். சீதை சிறையினின்று திரும்பினாற் போலப் பெருமகிழ்ச்சியடைந்தான் இராமன்.

அம்புபட்டுக் கும்பகருணன் தம்பித்திருந்த சந்தர்ப்பம் கிடைத்திராவிட்டால், அவன் காதையும் நாசியையும் கவர்தல் எவராலும் இயலாதசெயலென்பது செப்பவேண்டியதில்லை. (மூக்கும் காதும் பறிப்புண்ட அதிர்ச்சியால்) மூர்ச்சைதெளிந்த கும்பகருணன், அறிவு திரும்பவந்தபோது, சுக்கிரீவன் தப்பி ஓடினான் என்பதும், மூக்கும் காதும் பறிபோனதும் அறியலானான். நெற்றியினின்று இரத்தம்வழியப் பெருமூச்சுவிட்டுநின்ற கரிய பெரிய காத்திரமுடைய கும்பகருணனது தோற்றம், பெருமழை பெய்யச் சிவந்த காவிக்கற்பூமிவழியாகவந்த செங்கலங்கற் புது வெள்ளம் உச்சியினின்று அருவியாக ஒழுகாநிற்க, வாடைக் காற்று வீசலுற்ற கரியமலையின் காட்சிபோன்றிருந்தது. இரா வணன் எண்ணிப்பாராது ஒருபெண்ணைக் கவர்ந்ததனால் நேர்ந்த போரில் மூக்கும் காதும் போக்கும்படி நேர்ந்ததென்று புழுங்கி,

'இராமன் என் மூக்கிழந்த முகத்தைக் காணுமுன் நான் அவனைக் காண்பேனென்'று கத்தியும் கேடகமும் கைக்கொண்டான். அவன் கேடகத்தை வீசியதனாலுண்டாகிய காற்றுவேகம், குரங்குகளைப் பலதிசைகளிலும் சிதற எறிந்து, கடல் திடராகும்படிசெய்தது. அந்தக் கேடகத்தை இராமன் அம்பால் அறுத்தான். அறுக்கவே, அவன் வேறொரு கேடகத்தைக் கைக்கொண்டு அதனாலும் தன் காலாலும் தாக்க வானரசேனை சிதறியொழிந்தது. அப்போது சாம்பவான் இராமனை அணுகி, 'இந்தக் கும்பகருணனை நீ பொருட்படுத்தாது புறக்கணித்தாயானால், வானரசைனியத்தை மாய்வித்து இராக்கதரை வாழ்வித்தாயாவாய்' என்றுகூறிப் போர்புரியுமாறு தூண்டினான்.

இராம கும்பகருணர் போர்.

இராமன், பதின்மூன்றுபாணங்களை எய்தான். அவைகளைக் கும்பகருணன் வாளால் தூளாக்கினான். அவன் வேறு பலகணைகளை விடுத்தான். இவன் அவைகளைக் கேடகத்தினாற் கெடுத்தான். அவன் மற்றொரு சரந்தொடுத்து இவன் வாளை அறுத்தான். இவன் வேறொருவாளை எடுத்து, (இதனால் எல்லாரையும்) 'முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன்' என்று கூறிக்கொண்டு, அவன்முன்வந்து நின்றான். அவன், அந்த வாளையும் துண்டித்து, கேடகத்தையும் கீழேவிழச்செய்து, கவசத்தைத் தாக்கும்படி பலகணைகளைச் செலுத்தி, இவனைக் கொல்லுவதற்கு இதுவே ஏற்ற சமயமென்றெண்ணின தற்சமயத்தில், இராவணன் அனுப்பிய சேனை வந்துசேர்ந்தது. அது, அழித்தற்குத் தீப்போலத் தீவினைப் பயன்வந்தபோது, காத்தற்கு நீர்போல் நல்வினைப்பயன் வந்ததை ஒத்தது.

வந்த சேனை கும்பகருணனைச் சூழ்ந்து காத்துநின்றது. அந்தச் சேனையைநோக்கி இராமன், 'வருக, பொருக' என்று அறைகூவி எதிர்த்துநின்றான். கும்பகருணன் கொடிய சூலம் ஒன்றை ஏந்தி இராமனெதிரே தோன்றினான். அவனுக்குத் துணையாகவந்த சதுரங்கசேனைவீரர்கள் செலுத்திய அம்புமுதலியவைகளையும் அவ்வீரர்களையும் தேர் யானை குதிரைகளையும் இராமபாணங்கள்

அழித்துவிட்டன. போர்க்களம் பார்க்கவந்த தேவர்கள், இராக்கத வீரர் எவரையும் கண்டிலர். அவர்களுடைய உடல்களைத்தேடும் அவர்கள் மனைவியரையே கண்டனர். சேனைகள் யாவையும் இழந்து கும்பகருணன் தனிப்பட்டுநின்றான்.]

94 ஏதி யோடெதிர்[1] பெருந்துணை[2] யிழந்தனை யெதிரோரு தனிநின்றாய்
நீதி யோனுடன் பிறந்தனை யாதலி னின்னுயிர் நினக்கீவன்
போதி யோபின்றை[3] வருதியோ வன்றெனிற் போர்புரிந் திப்போதே[4]
சாதி யோவுனக் குறுவது சொல்லுதி சமைவுறத் தெரிந்தம்மா.[5]

கொண்டுகூட்டு: 'ஏதியோடு எதிர் பெரும் துணை இழந்தனை; எதிர் ஒருதனி நின்றாய்; நீதியோனுடன் பிறந்தனை; ஆதலின் நின் உயிர் நினக்கு ஈவன். போதியோ? பின்றை வருதியோ? அன்றெனில், போர்புரிந்து இப்போதே சாதியோ? உனக்குறுவது சமைவுறத் தெரிந்து சொல்லுதி'

பொருள்: '(நான் சொல்வதைக்கேள். நிராயுதரான என் வானரப்படைபோலன்றி) ஆயுதங்களோடுகூடி எதிர்க்கும் பெருந் துணை(யாயிருந்த உன்படை)யை இழந்தாய். என் எதிரே தன்னந் தனியனாய் (என்னால் எளிதாகக் கொல்லக்கூடியவனாய்) நின்றாய். நீ நீதிமானான விபீடணனுடன் பிறந்தாய், ஆதலால், (கொல் லாமல்) உன் உயிரை உனக்குத் தருவேன். (தந்த உயிர்கொண்டு உன் ஊர்க்குப்) போகின்றாயா? (போய் அங்கேயே இருந்துவிடப் போகிறாயா? அல்லது, சிறிது தங்கிச் சிரமபரிகாரஞ்செய்து கொண்டு) பின்பு (திருப்பிப் போர்க்கு) வருகின்றாயா? (இரண்டும்) இல்லையென்றால், இப்போதே போர்புரிந்து சாகின்றாயா? அமைதி யாக ஆராய்ந்து உனக்குப் பொருந்தியதைக் கூறு.

ஏதி - ஆயுதம். போதி - போகின்றாய். பின்றை - பின்பு. வருதி - வருகின்றாய். சாதி - சாகின்றாய். உறுவது - பொருந்துவது. சொல்லுதி - சொல்லுவாயாக. சமைவுற - அமைதியாக. அம்மா - அசைச்சொல்.

இப்பாட்டு, முதனாட்போரில், இராவணன் படைமுழுதும் அழிந்து தனியனாய்நின்றபோது, அவனைநோக்கி இராமன்கூறிய தாகவுள்ள,

'ஆள யாஉனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வா'என நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறும் கோசல நாடுடை வள்ளல்.

என்ற பாட்டை நினைவுகூரச்செய்கின்றது.

பாடபேதம்: [1] எதியோடுடன். [2] பொருந்துணை. [3] நாளை. [4] பொரு திப்போதே, புரிந்திப்போழ்து. [5] தெரிவுறச் சமைந்தம்மா.

['நீ முன்செய்த தீவினைப்பயன் அனுபவிக்கவேண்டிய குறையிருக்கிறது. அதனால், நான் உன்தம்பியை அனுப்பி உன்னை அழைத்தபோது நீ வந்தாயில்லை. இயமனுணைவழிநின்றாய் என்னிடம் வந்திருந்தாயானால், உன்கைக்குவருவதாயிருந்த உயர்செல்வம் உன்கையைவிட்டுத் தவறிவிட்டது. இந்தநிலையில் உனக்கு விருப்பமானதை உரைப்பாயாக' என்றான்: இராமன். கும்பகருணன், '(என்னை உயிரோடு விட்டுவிடும்படி உன்னை யான் வேண்டும்படி தூண்டுகின்றாய்.) மானம், வீரநெறிதவறாது பெற்ற வெற்றி, நீதி, குடிப்பிறப்பு முதலிய சிறப்புக்களுக்கு இருப்பிடமெனப்பெற்ற உங்களால், எங்களைவிட்டுப்பிரிந்து தனியளானசமயத்தில் மூக்கும் காதும் அறுக்கப்பட்ட எங்கள் தங்கைபோல, மூக்கறை காதறையாய் முண்டமான முகத்தைக் காட்டிக்கொண்டு உயிரோடிருத்தல் என்னால் பொறுக்கமுடியாதது. "பிறர்மனைவியைக் கவர்தல் பெரும்பிழை, சீதையை விட்டுவிடு" என்று என் தமையனிடம் யான்கூறியதை அவன் கேளாமையால், தக்கோர்முன் (பேசமுடியாதேனாய்) வாக்கிழந்து வருந்திக்கொண்டிருந்த யான், மூக்கும் இழந்தபின் ஊர்க்குத்திரும்புவது ஒருகாலும் முடியாது. உங்கள் தோள்களையும் தலைகளையும் வாள்கொண்டு துண்டமாக்கி என் தமையன் மகிழும்வண்ணம் சீதையை அவனுக்குச் சாசுவதாமாகக் கொடுக்கும்படிகருதிப் பொருதற்குவந்த யான், அந்தத்தமையன் எதிரே மூக்குங் காதும் அறுபட்ட முகத்துடன் ("ஐயோ விதியே" என்று) கையைத் தலைமேல்வைத்துக்கொண்டு கண்ணீர் சொரிந்து கத்தியழுது காலடியில் விழுந்த என்தங்கைபோல, வீழ்வேனோ.

இந்த இழிசெயல் செய்தற்கு என் மானமும் வீரமும் இடங்கொடா. என்னைப்போல் மானமும் வீரமும் உடைய நீ "ஊருக்குப்போக விரும்புவையானல், போ" என்று எவ்வாறு கூறினய்' என்ருன்.

உடனே வலக்கையிலிருந்த சூலத்தை இடக்கையிலுறும்படி மாற்றி, அந்த வலக்கையினல் ஒரு மலையைப் பெயர்த்து, இராமன் தலையைக்குறித்து, 'வெற்றிபெற்றிடுக' என்று கூறி, விசைத்து வீசினன். இராமன் அம்பெய்து அந்த மலையைத் தூளாக்கிச் சூலத்தைத் துண்டுபடுத்தினன். கடலை வறட்டவும் இடியைச் சுடவும் மேருவை உருவவும் விண்ணைக் கடக்கவும் வல்ல இராமபாணங்கள் கும்பகருணனுடலைத் தாக்கும்படி எய்யப்பட்டவைகள், அவன் கவசத்தைத் துளைக்கமாட்டாதனவாயின. அது கும்பகருணனுக்குச் சிவபிரான் அளித்த சிவகவசமாதலால் சேதிக்கப்படவில்லையென்று தெரிந்து, இராமன், சங்கரனை அதிதேவதையாகவுடைய பாணத்தை அபிமந்திரித்துக் கும்பகருணனைக் குறித்து விடுத்தான். அதனல், அந்தக் கவசம் சிதைந்து கீழே விழுந்தது. விழவே, கும்பகருணன் ஓர் உறுதியான தண்டாயுதத்தைக் கையிற்கொண்டு அதனல் வானரப்படையைச் சாந்தாகும்படி தரையோடு அரைத்தான். இராமன், அவனைத் தாக்கும்படி கணக்கற்ற அம்புகளை மழைபோலப் பொழிவதை அவன் பொருட்படுத்தாமல் பெருஞ்சாரி திரிந்தான்.

பின்பு அவன் வாளை எடுக்கவே, வானரர் மறுகினர்கள். வாள்வைத்திருந்த கையை இராமன் ஓர் அம்பினல் வெட்டிவீழ்த்தினன். அற்ற கையை அருத கையாலெடுத்து ஆரவாரித்து வானரங்களைப் பல்லிளித்துக்கொண்டு பலதிசைகளிலும் ஓடும்படி சாடினன்; கையறுபட்டும் முன்னைவிட மும்மடங்கு அதிகமாக வானரசைனியத்தை—இராமன் காத்துநிற்கவும்—மாள்வித்தான். 'இவன் வீரம், இவனுக்கே சொந்தமான சுத்தவீரம்; மற்றவர்வீரம் இவனிடம் இரந்துபெற்ற பிச்சைவீரம். இன்ருேடு வானரசேனையாவையும் மாண்டிடும்' என்று வானரர் கூறி(க் கும்பகருணனது)

உடலை நீங்காத கையைக்காட்டிலும் நீங்கின கையைக் கண்டு அஞ்சினார்கள். மலையினின்று அருவி ஒழுகுவதுபோல அற்ற தோளினின்று ரத்தம் பெருகக் கும்பகருணன் இராமனை நோக்கி ஓடினான். இவன் அவனது அறாத கையை அம்பாலறுத்துக் கடலில் வீழச்செய்தான். அது (முந்தியிட்ட அணையன்றி) வேறோரணையிட்டதுபோன்றது; அன்றி, அது, அதனைச் சூழ்ந்துள்ள தோள்வளையோடு, அந்நாளில் அமுதங்கடைய அமரர் கடலில் இட்ட வாசுகிப்பாம்பு தாம்பாகச் சுற்றப்பெற்ற மந்தரமலையை ஒத்தது. கைகளற்ற கும்பகருணன் வானரசேனாசமுத்திரத்தைத் தோல் சதை எலும்பு இரத்தம் எல்லாம் ஒன்றாகக் குழம்பும்படி கால்களால் துகைத்து உழக்கினான். (அவன் காலாற் சேனையை அழித்தலைக்கண்டு) இராமன் அவனுடைய வலக்காலை இலக்காகக் கொண்டு ஓர் அம்பு எய்து அதனை அகற்றினான். பற்கள் நட்சத்திரங்களாக, கோரப்பல் பிறைச்சந்திரனாக, இரத்தப்பெருக்கு செவ்வானமாக, அந்திப்போது வந்தாற்போன்று பெருவாயை விரிவாகப் பிளந்தவண்ணமாய், ஒற்றைக்கால்கொண்டு தத்திப்போய்ப் பக்கத்தில் உள்ளவைகளையெல்லாம் கடித்துச் சுழல்காற்றுப்போல வட்டமிட்டுக்கொண்டு தொடர்ந்து கொலைசெய்யுங் கும்பகருணனது மற்றொரு காலும் அற்றுவிழும்படி இராமன் வேறோர் அம்பு எய்தான். இராமபாணங்களால் கைகளிரண்டும் கால்களிரண்டும் அறுபட்டனவாயின. உடம்பு முழுதும் கணக்கின்றி துளைக்கப் பட்டன. ஆயினும், செயலற்றுப்போகானாய்க் கும்பகருணன், மலைகளை வாயினாற் கடித்துத் தன்னுள்ளிருந்து வெளிவரும் மூச்சுக் காற்றினால் ஊதியெறிந்து வானரர்களைக் கொன்றான்.]

95 ஐயன் விற்றொழிற் காயிர மிராவண ரமைவில[1] ரந்தோயான்
கையுங் கால்களு மிழந்தனன் வேறினி யுதவலாந்[2] துணைகாணேன்
மைய னோய்கொடு[3] முடிந்தவா றுளென்றும்[4] வரம்பின்றி வாழ்வானுக்[5]
குய்யு மாறரி தென்றுத னுள்ளத்தி னுணர்ந்தொரு துயருற்றான்.

கொண்டுகூட்டு: 'ஐயன் வில்தொழிற்கு ஆயிரம் இராவணர் அமைவு இலர். அந்தோ! யான் கையும் கால்களும் இழந்தனன். வேறு இனி உதவலாம் துணை காணேன். (அவன்) வாழ்நாள்(கள்) மையல்நோய்கொ(ண்)டு

முடிந்த; (வாழ்நாள்) வரம்பின்றி வாழ்வானுக்கு உய்யும் ஆறு அரிது' என்று (எண்ணித்) தன் உள்ளத்தின் உணர்ந்து ஒரு துயர் உற்றான்.

பொருள்: 'இந்த மகானுடைய விற்றொழிலுக்கு ஆயிரம் இராவணர் போதார். [இப்போதுள்ள இராவணன்போல ஆயிரம் இராவணர்கள் உளராய், அவர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து எதிர்த்தாலும் அவர்கள் அனைவரையும் வென்றுவிடும், இராமனது விற்றொழிற்றிறமை என்றபடி]. (அப்படிப்பட்ட விற்றொழிலுக்கு எதிராக, அந்த இராவணனை என் தமையனுக்கு உதவியாக முயன்ற யான், அம்முயற்சிக்கு உதவியாயிருந்த) கைகளையும் கால்களையும் இழந்தேன். இனிமேல் (அவனுக்கு உதவிசெய்தற்கு அந்தக் கை கால்கள்போல) உதவத்தக்க வேறு துணை(ப் பொருளொன்றையும்) காண்கிலேன். அவன் வாழ்நாள்கள் அவன் காமநோய்கொண்டதனால் முடிவுற்றன. (அந்தக்காமநோய்க்கு இடங்கொடாதிருந்திருப்பானேயானால், வாழ்நாள்களுக்கு) எல்லையில்லாமல் எக்காலமும் வாழவேண்டியவனாயிருந்த அவனுக்கு (என்னை வென்ற இராமனுடைய வில்லம்பினின்று) தப்பிப்பிழைக்கும்வழியில்லை' என்று தன்மனத்துள்ளே உணர்ந்து மிக்க துக்கமுற்றான்.

ஐயன் - உயர்ந்தோன் (தமிழகராதி). அமைவு - போதியதாதல். அந்தோ - ஐயோ. மையல் - மயல் - காமம். கொடு - கொண்டு. 'வாழ்நாள்' என்பதற்கு வாழ்நாள்கள் எனப் பன்மைப்பொருள்கொண்டு, 'முடிந்த' என்பதற்கு 'முடிவுற்றன' என்று பொருள்கூறப்பட்டது. 'வாழ்நாள்' என்பதற்கு ஆயுட்காலம் என்ற ஒருமைப்பொருள்கொண்டால், 'முடிந்தது' என்பது செய்யுள்வழக்காக 'முடிந்த' எனக் கடைக்குறையாக நின்றதெனக் கொள்ளல்வேண்டும். திருவவதாரப்படலத்தில் திருமால், 'கருமுகில்...... செம்பொற்குன்றின்மேல் வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்' என்பதில் 'வருவது' 'வருவ' எனக் கடைகுறைந்துவந்திருத்தல் காண்க.

வரம்பு - எல்லை. உய்தல் - தப்புதல் - தப்பிப்பிழைத்தல். ஒரு - ஒப்பற்ற. துயர் - துன்பம். 'என்றும் வரம்பின்றி வாழ்வானுக்கு வாழ்நாள் மையல்நோய்கொடு முடிந்த' என இயைத்துப் பொருள்கொள்ளலுமாம்.

இவ்வாறு இருவகையாக(த் தாப்பிசைப்*பொருள்கோளாக)க் கொண்டு கூட்டிப் பொருள்கொள்ளுதற்கு இசைவாக 'வாழ்நாள்' இடைநிலையாக நிற்றல் கவனிக்கத்தக்கது.

கும்பகருணனுக்குத் தன் கை கால்கள் போனதும் உயிரே போகப்போவதும்பற்றிய வருத்தமில்லை (வருத்தமில்லையென்பானேன், எண்ணமேயில்லை). இப்போது அவன் எண்ணமெல்லாம் அண்ணனையேபற்றி நிகழ்கின்றன. அண்ணனுக்காகப் போரில் தான் செய்த அரிய பெரிய அசாத்திய சாகச கிருத்தியங்களினும் அதிகமாகச்செய்தற்கில்லையென்பதே அவனுக்குக் கவலையாயிருக்கிறது. 'இன்னும் அதிகமாக வீரம் செலுத்தி அவனைக் காக்க முடியவில்லையே, அந்தோ, இராமபாணத்துக்கு இரையாகாமல் தப்பமாட்டானே, எல்லாச்செல்வங்களும் புகழ்களும் நிரம்பி மகோன்னதநிலையிலிருந்தவன் மாண்டு மண்ணோடு மண்ணாகப் போகப்போகிறானே' என்று துக்கித்துத் துயர்க்கடலின் ஆழத்துள் ஆழ்கின்றான். இப்படிப்பட்ட ஒப்புயர்வற்ற உடன்பிறப்புப்பற்றே உருப்பெற்றாற்போன்ற கும்பகருணனைத் தம்பியாகப்பெற்றது, இராவணன் நல்வினைப்பயனாக அடைந்த பாக்கியங்களெல்லாவற்றினும் சிறந்த தலைமையான பாக்கியமென்பது சிறிதுசிந்திப்பார்க்கும் தெரியலாவதாம்.

பாடபேதம்: [1] அமைகிலர். [2] உதவலன். [3] நோயொடு. [4] முடிந்தவனென்று, முடிந்தவென் முன்னவன், முடித்தவானென்றும். [5] வாழ்ந்தானுக்.

[கும்பகருணன்மனம், தமையன் இறந்துவிடுவானே யென்ற துன்பத்தில் ஆழ்ந்திருந்தபோது, அவன் கண்கள், ஒடிந்த தேர்களையும் மடிந்த யானை குதிரை ஆள்களையும் இரத்தவெள்ளம் இழுத்தோடுவதைக் காண்கின்றன. (அக்காட்சி) அவன் துன்பத்தை ஒருவாறு மாற்ற, அவன், 'சாகுந்தமையனுக்கு ஆகும் உதவி

* தாப்பிசை - செய்யுளின் இடையில் உள்ள மொழி முன்னும் பின்னுஞ் சென்றுகூடும் பொருள்கோள்.

யாதுஞ் செய்தற்கில்லை. வாழுந் தம்பிக்கு நாம் சாகுமுன் செய்யக் கூடியதைச் 'செய்தல்வேண்டும்' என்ற எண்ணம் தோன்ற, இராமனைநோக்கிக் கூறுகின்றான். 'அடைக்கலம் என்று அலறித் தன்னையடைந்த அறப் புறுவைக் காப்பதற்காக, அதனை அம் பெய்துகொல்லத் தொடர்ந்துவந்த வேடனுக்கு அதன் எடையளவு தன்சதை தருவதாகச் சம்மதித்துத் தராசுத்தட்டு ஒன்றில் அதனை வைத்து, மற்றொன்றில் தன் சதையை அறுத்துவைக்க வைக்க நிறை, குறைதீராமை கண்டு, தானே அத்தட்டிலேறித் தன்னையே தியாகஞ்செய்த சிபிச்சக்கரவர்த்தியின் வழித்தோன்றலே! அடைக்கலமடைந்தாரை ஆதரித்துக்காக்கும் கடன் ஏற்கெனவே உன் குலதருமமாய் உனக்கு உரியதாயுள்ளது. ஆதலால் எங்களைத் துறந்து உங்களை அடைந்த என் தம்பியை நீ காத்தல் வேண்டும் என்பது என் மரணகாலப்பிரார்த்தனை' (சாகுந்தறுவாய் வேண்டுகோள்)]

96 நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லாற்
சாதியால் வந்தசிறு நெறியறியா னென்றம்பி
ஆதியா யுனை[1]யடைந்தா னரசவுருக் கொண்டமைந்த
வேதியா வின்னமுனக் கடைக்கலம்யான்[2] வேண்டினேன்.

கொண்டுகூட்டு: 'அரசவுருக்கொண்டு அமைந்த வேதியா! என் தம்பி, நீதியால்வந்த நெடும் (காலமாகவுள்ள) ஒரு தருமநெறி (அறிவானே) அல்லா(ம)ல், சாதியால்வந்த சிறுநெறி அறியான். (அவன்) உன்னை ஆதியாய் அடைந்தான். (அவன்) உனக்கு அடைக்கலமா(க) இன்னம் யான் வேண்டினேன்.'

பொருள்: அரசவடிவங்கொண்டு (பூமியில்) அவதரித்திருக்கின்ற ஆதிதேவனே! என்தம்பி, (ஆன்றோரது) ஒழுக்கமுறையாக அமைந்த நீண்டகாலமாகவுள்ள உயர்வான தருமமார்க்கத்தை அறிவானே அன்றி, (அவன் பிறந்த இராட்சச) சாதிக்குரிய குற்றமான வழிகளை அறியாதவன். உன்னை (அவன் முன்னமே அடைக்கலமாக) அடைந்திருக்கின்றான். நீ அவனை அடைக்கலப் பொருளாகக் காத்தலை மீண்டும் யான் வேண்டுகின்றேன்.

நீதி - ஒழுக்கநெறி. ஒரு - ஒப்பற்ற. சிறுமை - குற்றம் (தமிழகராதி). நெறி - வழி. சிறுநெறி - குற்றமான வழி. ஆதியாய் - முன்னதாக: ஆதி யானவனே எனலுமாம். வேதியன் - கடவுள்.

கடவுளே இராமனாக அவதரித்திருக்கிறானென்றுணர்ந்து, கும்ப கருணன், 'அரசவுருக்கொண்டு அமைந்த வேதியா' என்றான். இவ்வாறே, இராமன் அவதாரபுருடனென்றறிந்து, பரசுராமன், இராமனைநோக்கி, 'நீதியாய்............நீஇங் கியாவர்க்கும், ஆதியான் அறிந்தனன். அலங்கல் நேமியாய், வேதியா...........' என்று கூறியிருப்பது காண்க. (பரசுராமப் படலம் ௩௪.)

பாடபேதம்: [1] ஆதியானுனை. [2] அடைக்கலந்தான்.

[இராவணன், இவன் (விபீடணன்) தன்னை (இராவணனை) வேரோடுங் கெடுக்கமுயல்கின்றானென்று கடும்பகைகொண்டிருக் கின்றான். சகோதரன் சத்துருவானாலும் சகோதரனே என்ற மனப்பான்மையில்லாதவன். கொல்லக்கூடிய சமயம் வாய்த்தால், தம்பியென்றுபாராமல் சற்றுமிரங்காமல் கொன்றிடுவான். ஆத லால், விபீடணனை இடைவிடாமல் கவனித்துப் பாதுகாப்பாயாக. எவ்வகை அபாயமும் எய்தாதவண்ணம் என் தம்பி (விபீடணன்), உன் தம்பியுடனாவது உன்னுடனாவது அனுமானுடனாவது எப் போதும் பிரியாதிருக்கும் ஏற்பாடுபுரிவாயாக.*]

97 மூக்கிலா முகமென்று[1] முனிவர்களு மமரர்களும்
நோக்குவார் நோக்காமை நுன்[2]கணையா லென்கழுத்தை
நீக்குவாய் நீக்கியபின் னெடுந்தலையைக் கருங்கடலுட்
போக்குவாய் இதுநின்னை[3] வேண்டுகின்ற பொருளென்றான்.

---

* 'உம்பியைத்தான் உன்னைத்தான் அனுமனைத்தான் ஒருபொழுதும்
எம்பிபிரி யானாக அருளுதியான் வேண்டினேன்'—

உம்பி - உன்தம்பி. எம்பி - என்தம்பி. பிரியானாக - பிரியாதிருக்கும் படி. அருளுதி - அருள்வாயாக.

கொண்டுகூட்டு: 'முனிவர்களும் அமரர்களும் "மூக்கிலாமுகம்" என்று (சொல்லி) நோக்குவார். (அவர்கள்) நோக்காமை நுன்கணையால் என் கழுத்தை நீக்குவாய். நீக்கியபின் என்தலையைக் கருங்கடலுள் போக்குவாய். இது (யான்) உன்னை வேண்டுகின்ற பொருள்' என்றான்.

பொருள்: (இதுவரை என்னைப் பார்க்கப் பயந்திருந்த) தேவர்களும் முனிவர்களும் யான் இறந்தபோது பயம் நீங்கிப் பார்க்கவருவார்கள்; அப்படி வரும் முனிவர்களும் தேவர்களும் (என் முகத்தை) மூக்கிலாமுக மென்று சொல்லிக்கொண்டு பார்ப்பார்கள்; (ஆதலால் அவர்கள்) பார்க்காதிருக்கும்படி உன் அம்பினால் என் கழுத்தை (அறுத்துத் தலையை) நீக்குவாய்; நீக்கியபின் (அந்தத்) தலையைக் கடலினுள்ளே (முழுகிப்)போகும்படிசெய்வாய்; இது யான் உன்னை வேண்டுகின்ற காரியம்.

அமரர் - தேவர். நோக்காமை - நோக்காமல். நுன் கணை - உன் அம்பு. நெடும் தலை - பெரிய தலை. பொருள் - காரியம் - விஷயம் (தமிழகராதி). அடுத்தபாட்டில் 'வரங்கொண்டான் இனிமறுத்தல் வழக்கன்று' என வரலால், 'பொருள்' என்பதற்கு 'வரம்' என்றும் பொருள்கொள்ளலாம்.

'என் தம்பிக்காக நான்செய்த வேண்டுகோளை நிறைவேற்றுவதாக நீ முன்னமே அவனுக்கு வாக்களித்திருப்பதனால், அதை நிறைவேற்றுவாய் என்பது நிச்சயம். ஆதலால், அதனை நீ நிறைவேற்றியதாகக்கொண்டு, அதற்காக, என் நன்றியுணர்வைத் தெரிவித்துக்கொள்கிறேன். "என் தலையை உடலினின்று நீக்கிக் கடலுள் முழுகுவிப்பாயாக" என்ற வேண்டுகோள் மரணகாலப் பிரார்த்தனையென்பதுபற்றி மறக்காது நிறைவேற்றப்படுமென்ற நம்பிக்கையினால், அதற்காகவும் இப்போதே நன்றிசெலுத்துகின்றேன், அதை நீ நிறைவேற்றியபின் (—என் தலையை அப்புறப் படுத்தியபின்—) என்னால் யாதுஞ்செய்தல் இயலாதாதலால்' என்று கும்பகருணன் தன் கண்ணால் வெளியிட—(கண்ணாகிய வாயாற் கூற) அதனை இராமன் தன்கண்ணால் அறிந்தான். (தன் கண்ணாகிய

காதாற் கேட்டுணர்ந்தான்—) என்றும், தலையைக் கடலுள் முழுகச் செய்யவேண்டுமென்று வரங்கேட்கும்வரை, மூக்கு காது கை கால்கள் பறியுண்ட புண்களினின்றும் ஒழுகிய இரத்த ஓட்டத்தால் ஏற்பட்ட சோர்வினால் மேற்கொண்டு பேச இயலாதவனானதனால், மேற்குறித்த வரங்கேட்டபின் வெளியிடக் கருதியவைகளை வாயாலன்றிக் கண்ணால் வெளியிட்டான் என்றும் இங்கே நாம் ஊகிக்கலாம்.

பாடபேதம்: [1] முகம்வந்து. [2] நோக்குவார் நோக்காமுன்னரு, நோக்கலா னோக்காமே நோன். [3] இதுவெனக்கு.

['இவன் மரணவேளையிற் கேட்ட வரத்தை மறுத்தல் முறையன்று' என்று, இராமன் எண்ணிச் சாத்திரணமான பாணத்தால் கும்பகருணனது தலையைக் கொய்து, வாயுபாணத்தால் அதனைக் கடலில் ஆழமான இடத்தில் அழுந்தச்செய்தான்.

கும்பகருணன் இறக்கவே, தேவர்கள் ஆநந்தக்கூத்தாடினார்கள். தேவமாதர் கீதம்பாடினார்கள். அந்தணரும் முனிவரும் அச்சம் நீங்கினார்கள்.* சேனைத்தலைவர் இராமனைச் சூழ்ந்து கூடி வாழ்த்தெடுத்தார்கள். அரக்கர் அஞ்சியோடி, நிகழ்ந்ததை இராவணனுக்குத் தெரிவிக்கச் சென்றார்கள்.]

கும்பகருணன்வதைப்படலம் முற்றியது.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

* 'ஆடினார் வானவர்கள் அரமகளிர் அமுத இசை
பாடினார் மாதவரும் வேதியரும் பயந் தீர்ந்தார்'

அரமகளிர் - தேவமாதர். அமுத இசை - அமுதம்போலும் இனிய இசைப்பாட்டு.

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்.

(கலைமகள்கழுத்தணி)

[க்கூஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

22. ரீதி.

உபக்ரமஸ்ய நிர்வாஹோ ரீதிரித்யபிதீயதே ।

தொடங்கியமுறையைக் கடைபோகச்செலுத்துவதால் "ரீதி" என்னும் குணம் தோன்றும்.

உதாரணம்:—

க்ராவ்ணா நாஸி விபீடிதா ந பயஸா நார்திதாஸி ந க்லாபிதா
ந்ஶ்வாஸைர் விஷிணோ'ஸி ந க்ஷதம் நோ ஸகீபிர் நாயாஸிதா க்லாபிதா ।
லக்ஷ்மீம் வக்ஷஸி ப்ரத்யுத்தாரிதவதோ ஹரேஃ ஸ்ரீஹர்ஷிணோ ஸம்வாதம்
ஸா வ: பாது ஸ்ரோத்ராயாதம் ஸம்ஸ்ருதஹ்ருதயோர் தீர்கதா வர்த்ததாம் வ: ॥

"மலையின் கற்களால் நீ தாக்கப்படவில்லையா? இல்லை; நீர்ப் பெருக்கால் நீ துன்புறுத்தப்படவில்லையா? இல்லை; அரவின் சுவாஸங்களால் நீ வாடவில்லையா? இல்லை; எங்கும் உன்னைத் தொடர்ந்து வரும் தோழிகளைப்படைவிக்கப்படவில்லையா? இல்லை;"—தம்மிடத்திற்குத் திரும்பும் திருமாலுக்கும் இலக்குமிதேவிக்குமிடையில் நிகழ்ந்ததும் காதலுடன் கூடியதுமான இந்த நீண்ட ஸம்வாதம் உங்களைக் காப்பதாக.

இங்கே, முதலில் வினவும் பின்பு 'இல்லை' என்று விடையுமாகச் சொல்லுமுறையைத் தொடக்கமுதல் முழுவதும் கையாண்டிருத்தலால், இது "ரீதி" என்னும் குணமுடையதாம்.

23. உக்தி.

விஶிஷ்டாஸணிதிபங்கீரஸ்யாதுக்திஂ தாஂ கவயோ விது:॥ ௭௬॥

சிறந்த பொருள் தோன்றுமாறு சொற்களைத் தொடுத்துக் கூறலை 'உக்தி' என்னும் குணமென்று கவிஞர் கூறுவர்.

உதாரணம்:—

காஶமஂ தஸ்யா ஜீவதி காஶமஂ வ்யாஹ்ருதி ஜீவதீத்யாத்த ।
வாநார்தவிதமேவ கதயஸி ஶ்வஸந்தீஂ ந கதயாமி யா ம்ருதேதி ॥

அவள் க்ஷேமமாயிருக்கிருளா? உயிருடன் இருக்கிருள்; நான் க்ஷேமத்தைப்பற்றி வினவுகின்றேன்? உயிருடன் இருக்கிருளென்று விடையளிக்கப்பட்டதே; மறுமுறையும் முன்சொன்னதையே சொல்லுகிருயே? சுவாஸம் விட்டுக்கொண்டிருப்பவளை இறந்துவிட்டவளாக நான் எங்ஙனம் சொல்லுவேன்.

(இச்சுலோகம் தலைவியின் க்ஷேமத்தைப்பற்றித் தலைவனுக்கும் தோழிக்கும் நிகழ்ந்த வினவுத்தரமாக அமைந்துள்ளது.) இங்கே, தலைவி க்ஷேமமாயிருக்கிருளா? என்ற வினவுக்கு 'தலைவி க்ஷேமமாயிருக்கிருள், அல்லது க்ஷேமமாயில்லை' என்று நேர்முகமாக விடையளியாது, அவளுடைய எல்லா நலன்களும் அழிந்தொழிந்தன: என்னும் ஒரு சிறந்த கருத்தை உட்கொண்டு 'உயிருடனிருக்கிருள்' என்று விடையளித்தல், காப்பியச்சொற்குணங்களில் 'உக்தி' என்னும் பெயரையடையும்.

24. பிரௌடி.

உக்தே: ப்ரௌடா: பதீவாகா: ப்ரோச்யதே ப்ரௌடிஸஂஜ்ஞயா ।

ஒருவாக்கியத்திற் காணப்படும் சொற்களுக்குப் பிரதியாக வேறுசொற்களைத்தந்து அமைக்க இயலாதிருப்பின் அவ்வாக்கியம் 'பிரௌடி' என்னும் குணமுள்ளதெனப்படும்.

உதாரணம்:—

> 𑌅𑌭𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌾 𑌵𑌸𑍁𑌮𑌤𑍀 𑌦𑌲𑌿𑌤𑌂 𑌰𑌿𑌪𑍂𑌰𑌃
> 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑍀𑌕𑍃𑌤𑌂 𑌬𑌲𑌵𑌤𑌾 𑌬𑌲𑌿𑌰𑌾𑌜𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌃 ।
> 𑌏𑌕𑌤𑍍𑌰𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌕𑍃𑌤𑌂 𑌯𑌦𑌨𑍇𑌨 𑌯𑍂𑌨𑌾
> 𑌜𑌨𑍍𑌮𑌤𑍍𑌰𑌯𑍇 𑌤𑌦𑌕𑌰𑍋𑌤𑍍𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑌃 ॥

இந்த இளையோனால், பூமி மேலே எடுக்கப்பட்டது; பகைவன் மார்பு பிளக்கப்பட்டது; பலியரசர் (-வலிமையுள்ள அரசர், பலி யென்னும் அரசன்) செல்வம் கவரப்பட்டது. இங்ஙனம் இவன் ஒருபிறப்பிற் செய்தவற்றை, ஆதிபுருஷனை திருமால் மூன்று பிறப்பெடுத்துச் செய்துள்ளார்.

இச்சுலோகத்தில் முற்பாதியிலுள்ள 'பலிராஜ' முதலிய சொற்களை எடுத்து அவற்றிற்குப் பிரதியாக வேறுசொல் தந்துகூறின், இருபொருள்படுதற் கிடனின்றி யொழியுமாதலால், இது 'பாகம்' என்னும் குணமுடையதாய்ப் 'பிரௌடி' எனப்படுவதாயிற்று. இச் சுலோகச்சொன்னடையிலமைந்த 'பாகம்' நாளிகேரபாகம்' எனப் படும்.

> 𑌉𑌕𑍍𑌤𑌾𑌃 𑌶𑌬𑍍𑌦𑌗𑍁𑌣𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌰𑌿𑌤𑍍𑌯𑌮𑍀 ॥ ௭௭ ॥

இங்ஙனம் வாக்கியத்தில்வரும் இருபத்துநான்கு சொற்குணங்களும் சொல்லப்பட்டன.

வாக்கியப்பொருட்குணம்.

> 𑌅𑌥𑍈𑌤𑌾𑌨𑍇𑌵 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑍍𑌮𑌹𑍇 ।

இனி அவற்றை வாக்கியப்பொருட்குணங்களாக விளக்கிக் கூறுவோம்.

1. சிலேஷம்.

> 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌶𑍍𑌲𑍇𑌷 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌃 𑌸𑌂𑌵𑌿𑌧𑌾𑌨𑍇 𑌸𑍁𑌸𑍂𑌤𑍍𑌰𑌤𑌾 ॥

அப்பொருட்குணம் இருபத்துநான்கனுள்ளும், 'சிலேஷம்' என்பது, பொருளமைப்பில் தக்க உபாயத்தை நாடிச் சொல்லப் படுவது.

உதாரணம்:—

ஜூஹெஷ்காஸந ஸம்ஷ்ஹிதெ ஹியதகெ8 ஷ்ஹாஃஉெத்ராஷா
ஷெக்ஸ்ர நயநெ நிதீஷ்வு ஷிஷிதகீ்ஷா நஃவநுவு8 ।
ஸஂஷ இகீ்த கநுஸ8 ஸவஃஷுக8 ஷெுஹொஹுஸநா நஸா
8ஷஹஃாஸஷுஸ தவொஷஹஷகாஂய ஒெதஃா Zவஷாஂவஃஂவதீ ॥

தலைவனொருவன், தன்மனைவியரிருவர் ஒரே இடத்தில் இருப்பதைக் கண்டு, அவர்களறியாமல் மெல்லப் பின்புறமாகச் சென்று ஒருத்தியின் கண்களை விளையாட்டாகப் பொத்துவதுபோல நடித்து, தன்கழுத்தைச் சற்றுவளைத்துக்கொண்டு, பிரியமுடையவளும் அவன் செயலைக்கண்டு புன்சிரிப்புடையவளுமாகிய மற்றொரு மனைவியை முத்தமிடுகிறான்.

இங்கே; இரண்டுமனைவியரும் கூடியிருக்கும்போது ஒருத்தியை முத்த மிடவேண்டுமென்றெண்ணங்கொண்ட தலைமகன், அவருள் ஒருத்தி ஊடாதிருக்கவேண்டி, அவள்கண்களைப் பொத்துதலாகிய தக்க உபாயத்தைச் செய்ததாகப் பொருளமைக்கப்பட்டிருத்தலால் இது 'சிலேஷம்' என்னும் பொருட்குணமுடையதாயிற்று.

2. பிரஸாதம்.

யத்ஃஷூர்கடீ்யெஹஃஸ்ஷூஸாஷ8 ஷொZஹியீயதெ ।

ஒருபொருளை இன்னதென்று சொல்லாற் கூறுதிருப்ப, கூறியுள்ள வேறுபல சொற்றொடர்ப்பொருளால் அக்கூறுதபொருள் தெளிவாய் அறியப்படுமாயின் அங்கே 'பிரஸாதம்' என்னும் பொருட்குணம் தோன்றும்.

உதாரணம்:—

[illegible]

𑌉𑌦𑌯𑌗𑌿𑌰𑌿𑌵𑌨𑌾𑌲𑍀𑌬𑌾𑌲𑌮𑌨𑍍𑌦𑌾𑌰𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑍍 ।

[illegible]

𑌕𑍁𑌪𑌿𑌤𑌕𑌪𑌿𑌕𑌪𑍋𑌲𑌕𑍍𑌰𑍋𑌡𑌤𑌾𑌮𑍍𑌰𑌸𑍍𑌤𑌮𑌾𑌂𑌸𑌿 ॥

தாமரைகளின் குவிதலைப் போக்குபவனும், உதயகிரிக்காடுகளிற்பூத்த செவ்விமாறாத மந்தாரமலரைப்போன்றவனும், விரகநோயால் துன்புற்ற சக்கரவாகப்பறவைகளுக்குப் பந்துவாயுள்ளவனும், கோபங்கொண்ட குரங்கின்முகம்போற் சிவந்தவனுமாயுள்ளவன் இருளைப்பிளந்துகொண்டு உதயமாகிறான்.

இங்கே 'சூரியன்' என்னும் சொல் இல்லாதிருப்பினும் ஏனைய தொடர்ப்பொருளால் 'சூரியன்' என்னும் பொருள் தெளிவாய்த் தோன்றிநிற்றலால், இது, 'பிரஸாதம்' என்னும் பொருட்குணமுள்ளதாயிற்று.

3. சமத்துவம்.

[illegible] ॥ ௭௬ ॥

முறைப்படக்கூறவேண்டியபொருள்களை அம்முறைமாறாது கூறுதல் 'ஸமத்துவம்' எனப்படும்.

உதாரணம்:—

[illegible]

தோழ! குரவகமொட்டு முதலில் பெண்களின் நகம்போல் சிவந்ததாயும், பின்பு சற்று முதிர்ச்சியடைந்து, சிறிதே வெடித்து

இருபக்கங்களிலும் சற்றுக் கருத்ததாயும் உள்ளது; இளமை வாய்ந்த அசோகமொட்டு மிகச்சிவந்து அழகுவாய்ந்ததாயும் மலரும்செவ்விவாய்ந்ததாயும் உள்ளது; மாமரத்தில்தோன்றிய புதிய பூங்கொத்துச் சிறிது மகரந்தப்பொடிகளுடையதாய், நுனியிற் சிறிது கருத்துள்ளது;—ஆகையால் வசந்தகாலத்தின் சோலை, பெதும்பைப்பருவத்திற்கும் மங்கைப்பருவத்திற்கும் இடையாய நிலையில் உள்ளது.

இங்கே, பெதும்பைப்பருவத்திற்குரியநிலையை யாண்டும் முதலிற் கூறி மங்கைப்பருவத்திற்குரியநிலையைப் பின்பே கூறிவந்திருத்தலால் இது, 'ஸமதை' என்னும் குணமுள்ளதெனப் பட்டது.

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,

மதுரை.

ஸ்ரீ:

இராமசெயம்.*

(இராமாயணத் திருப்புகழ்.)

[கருஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

நயந்தொரு கோவைவெ ளுக்க
வகன்றிடு பார்வைசி வக்க
நலம்பெறு மேனிது வட்சி வடிவாக
நறுங்குழல் சோரவ ணைத்து
முழங்குபு ளோசையெ ழுப்பி
நடுங்கிய நூலிடை யுற்ற துகின்மாற
முயங்குப டீரவி சித்ர
தனங்களின் மூழ்கிர மிக்க
முகங்களி லேமுகம் வைத்து நெடுமோக
முதிர்ந்திட வேசுர தத்தின்
மடந்தைநல் லார்வச முற்று
முரண்படு மாயமொ ழிப்ப தொருநாளே
வியன்படை சேரமு டித்து
நிறைந்திடு சேனை[1]ய னைத்தும்
விளங்கிய போதுநி னைத்து நமனார்மேல்
வெகுண்டனு மானைவி டுத்து
நடுங்கிவ லாரிப தைக்க
மெலிந்துச ரோருக ணிற்க வினைவோரும்
[2]மயங்கியு தாதிபி றக்க
வெழுந்தழி யாதப தத்தின்
மகிழ்ந்துறை யாதியி டத்தி [3]லுடன்வாழும்

* எட்டுப்பிரதிகளிலுள்ளபடி வெளியிடப்படுகிறது.

வசந்தனை மீளவ ழைத்து
நெடுங்கவி ராசர்த மக்கு
வரும்படி வாழ்வுகொ டுத்த பெருமாளே. (89)

[பி-ம்] [1] யணைத்தும். அ. [2] மயக்கவு தாகி பிளக்க. அ. [3] னுடன். அ.

தந்தவ ரேப்ர தாபர்
நின்றவ ரேவ்ரு தாவர்
சந்தைய மேது நீதி யெனவோதிச்

சண்டையி டாவி டாம
லுண்டுமி லாது பேசு
சஞ்சல கார னாகி யுழல்வேனோ

கந்தையு டாம லீனர்
பந்திபு காமல் [1]வீறு
கண்டது கூறி டாமல் வறியோனைக்

கன்றியி டாம னூறு
மங்கல வாழ்வி னோடு
கங்கைகொள் பாத மேவ அருள்வாயே

வந்துபு ராதி வேத
னண்டர்ப ராவி யேக
வஞ்சிப தாதி சேட னிவரோடே

மண்டுவி மான மேறி
லங்கையெ லாமு லாவி
வண்கடல் சேது மேன்மை யுரையாடி

யந்தர மீதி லேகி
நன்கவி ராச சூரி
லன்புள மாத ரார்க ளனைவோரு

மம்புய மாதி னோடு
மங்கல வாய்மை பேசி
யங்கவர் சூழ மேவு பெருமாளே. (90)

[பி-ம்] [1] வேறு. அ.

முழுதுலக ளிப்பரோ விந்த்ர
பதவியிலி ருப்பரோ முந்தை
முனிவரொடு நிற்பரோ கங்குல் வெளியாக
முதிர்கதிர்வி டுப்பரோ சந்த்ர
வடிவதுப டைப்பரோ வஞ்சு
முகமொடுசி றப்பரோ வெண்டி கையினூடே

யழகுபெறு இற்பரோ முந்தி
யெழுபுவிபு ரப்பரோ வின்ப
வதிவிதவி சித்ரவே ளென்று திரிவாரோ
அடியவர்த மக்குநீ யெந்த
வுயர்பதம ளிப்பையோ வுன்ற
னருள்செறிம கப்ரசா தங்க ளறிவாரார்

எழுபதுவெ ளத்தினல் விஞ்சு
கவிமுழுது மொக்கவே கொண்டு
ரதமதுவி டுத்துநேர் வந்து திருமாதும்
இளவலுமு வப்பவே நின்று
பழையமொழி தப்பொணு தென்று
ரவிமகன ரக்கர்கோ னெஞ்சு கனிகூரப்

பழுதறுப ரத்துவா சன்ற
[1]னணிமலரி ருக்கையூ டன்று
பசிகெடவ மைத்ததோ ருண்டி நுகர்போதிற்
பரிவொடு க்ருபைக்கனல் வென்றி
யனுமனைவி ளித்துநீ சென்று
பரதனைய ளித்துவா வென்ற பெருமாளே. (91)

[ரி-ம்] [1] னளிமல. அ.

சினமொ டேவெ குண்டெ திர்ந்து
கொடுமை யாயி கழ்ந்தி யம்பு
சிறுமை யேது நெஞ்சு கிஞ்சி துணாத

தெளிவு தானு[1]மன்றி யந்த
வெகுளி யாளன் [2]வெந்து பின்பு
தினமு மேயெ ரிந்து கும்பி நரகூடே

தனிமை யாய்வி ழுந்த ழுந்தி
விடுவ னேகொ லென்றி ரங்கு
தகுதி யோர்சி றைந்தி ருந்த சகமீதே

தருமம் யாவை யுந்து றந்த
கொடிய னேனு நின்ற பண்பு
தனைவி டாம லைம்பு லன்கள் [3]சிறியாதோ

கனலின் மூழ்க வென்று [4]மூந்த
வலம தாக வந்து நின்ற
கருணை மேனி கண்டி ரங்கி யொருதூதன்

கடிதி னேகி யங்கி கொண்ட
குழியி லேவி ழுந்தெ ழுந்து
கரிய தாக முன்பி சைந்து தொழுபோதிற்

புனித மோதி ரங்கை கண்டு
மனது [5]தேறி லங்கை கொண்ட
புதுமை கூற வங்கு ணர்ந்து [6]தரியாதப்

பொழுதி லேந டந்து வந்து
பரத னோர்வ ணங்க நின்ற
புகழி ராம சந்த்ர வெங்கள் பெருமாளே. (92)

[பி-ம்] [1] மின்றி. அ. [2] வெந்த. அ. [3] நகையாதோ. அ. [4] முந்தி. அ. [5] தேற. அ. [6] தரியாதே. அ.

நெடுவா னூர்ந்தக ருஞ்சிலை யங்கத
னிடையே சார்ந்தத டிந்துவி யன்கிரி
நெறியே சேர்ந்துப ரம்பிவ ரும்புயல் வெயிலோன்முன்

னிரையே சூழ்ந்திடு மென்பனி தண்புனல்
செறிவே யாம்பசு மண்குட [1]மந்திர
நெறியே யாங்கெரி செங்கன லங்குமி ழிக[2]ணோரா

முடலே யீங்குநி ரந்தர முஞ்சுமை
யெனவே யோம்பிய னந்நி னைந்துள
மூலையா [3]வாழ்ந்துத யங்குவ மென்[4]றுனை [5]நினையாதே
யுழல்வேன் மூங்கையன் வஞ்சகன் வெஞ்சினன்
வினையே நீங்கிநி னன்பரி டந்தனி
[6]யொருநா ளீண்டிய றிந்துபெ ரும்பத மடைவேனோ

சடையே தாங்கியு மிந்திரி யங்களை
யொருவா துண்டுமி ரங்கிநி னைந்துடல்
தளரா நீங்கிய வின்பசு கங்களொ டிருபாதந்
தலைமே லேந்தியு நந்திபு ரந்தனில்
அமரா வூண்சுவை கண்டுயி லென்பவை
தவிரா மூண்டெழு சிந்தைநெ டுந்துய ரதனோடும்

படியே வேண்டுத லன்றியு மொன்றிய
கனஆ டாழ்ந்திட வென்றுநி ரம்பிய
பழியே பூண்டதி தென்றுத விர்ந்திடு மெனநாளும்
பரதாழ் வான்புரி கின்றபெ ருந்தவ
நினையா வோங்கிர தந்தனி லன்பொடு
பதினு லாண்டினில் வந்துமு னின்றருள் பெருமாளே. ()

[பி-ம்] [1] மந்தர. அ. [2] ளோரா. அ. [3] வாங்கு. அ. [4] றுயிர். அ. [5] நிலையாதே. அ. [6] லொருநா. அ.

மனுநெறி யேந டந்து
மறிஞரொ டேப யின்று
மறைகளெ லாமு ணர்ந்து மிருபோதும்
வருபுன லேப டிந்தும்
விரதமெ லாம டைந்தும்
[1]வகையற [2]வோகை கொண்டு மலையாதே
பிணிமையி னோடு சிந்தை
வெகுளியெ லாமு னிந்து
மெனதுன தாரி தென்கை யிலையாவு

மிருளற வேதெ ளிந்து
தொழுதுனை நாடு மன்பு
ரிணைபிரி யாத வின்ப — முறுவேனோ

அநுமனை யேவி நின்று
பரதனை யேகொ ணர்ந்த
வளனினி லேகி நந்தி — [3]புரமேபோய்
அருமறை சேர்ச டங்கின்
[4]மயிர்வினை [5]தான்வி ரும்பி
யழகிய தேரின் மந்த்ரி — கொடு[6]போதத்

தினகர சேயு மந்த
நிருதர்பி ரானும் விஞ்சு
[7]திறலினை யோனும் வந்து — புடைசூழத்
திருவொடும் வீறு கொண்ட
படையொடு மூர்பு குந்த
தெசரத ராம வெங்கள் — பெருமாளே. (94)

[பி-ம்] [1] வசையற. அ. [2] வோசை. அ. [3] புரமேவா. அ. [4] மயிரனை. அ. [5] நான். அ. [6] போகத். அ. [7] திறலனைவோரும். அ.

பிறந்தான்வி ளங்கு தொட்டி லுக்குள்
வளர்ந்தானு டம்பெ னக்கி டத்தல்
பெயர்ந்தானி ருந்து [1]நற்ற வழ்ச்சி — நடையானான்
பிசைந்தானெ டுங்கண் மைக்க ரிக்க
வுயர்ந்தான னங்க னுக்கி ரட்டி
[2]பிறந்தான ருந்த மிழ்[3]த்ர யத்தி — [4]னுணர்வானான்

சிறந்தான்ம டந்தை பொற்ற னத்தி
லுறைந்தான்வெ றுங்கை பட்ட வத்தை
[5]தெளிந்தான ரும்பி ணிக்க டற்கு — ணடுவானான்
திரிந்தான்மு டங்கி நெக்கு முக்கி
யிறந்தானெ னும்பி றப்ப றுத்தொர்
தினந்தான யந்த ழைத்த முத்தி — யருள்வாயே

நறுங்காய்கி ழங்கெ டுத்து வைத்தும்
வியன்காலை பண்[5]ப டச்ச மைத்து
நயந்தான்மி குந்த புற்ப டுத்து மணைபோல்வாள்
நடுங்காது நின்று நெட்ட ரக்கி
கொடுங்காது துண்ட மொப்ப ழித்து
நமன்போலு மிந்த்ர [7]சித்தி னுக்கு வினையாவும்

உறும்பாச முங்[8]கெ டுத்த லைத்து
மயன்பாண நெஞ்சு றப்பொ றுத்து
முடன்போய்ம கந்த னைக்கு லைத்தும் அவன்வாளுள்
உடைந்தோட வம்பி னைத்தொ டுத்து
மிலங்கேச னும்ப ரமிக்க நிற்கும்
உறங்காத தம்பி யைப்ப டைத்த பெருமாளே. (95)

[பி-ம்] [1] பிற்றுவட்சி. அ. [2] பிறழ்ந்தா. அ. [3] த்திறயத்தி. அ. [4] னுணர்வானுன். அ. [5] னெளிந்தா. அ. [6] புறச். அ. [7] சித்த. அ. [8] கெடத் தொலைத்து. அ.

ஏந்துதிரு மார்பா சரணம்
வேங்கடமு ராரீ சரணம்
ஈன்றுலகை யாள்வாய் சரணம் யமதூதர்
ஏங்கவரு வோனே சரணம்
ஓங்குமுடி யோனே சரணம்
யாம்பரவு பாதா சரணம் வினையாழி

நீந்தவிடு மாலே சரணம்
வாய்ந்ததுள வோனே சரணம்
நீண்டபுக ழோனே சரணம் உயர்கோயில்
நீங்கரிய கோவே சரணம்
வேண்டுவர மீவாய் சரணம்
நேர்ந்தவரு ளாளா சரணம் அருள்வாயே

போந்துநக ரூடே மவுலி
தாங்கியொரு மூவோ ரிளைஞர்
பூண்டபுக ழோடே யினிது முடிசூடிப்

பூங்கமலை தோளே மருவி
யாங்கிளைய கோவா மரசு
பூண்குலவு தோளார் பரதர் முழுதாள
[1]வார்தனையும் வேகா வனுமன்
வேந்துமுத லோர்வீ டணனு
மான்றதம தூர்போய் மருவ விடைபாலித்
தாண்டுபதி னோரா யிரமு
மீண்டுமுல கீரே ழினையும்
ஆண்டரகு நாதா பெரிய பெருமாளே. (96)
[பி-ம்] [1] வார்துனையும் ஏகா. அ.

துற்றபொருள் கொண்டு பாரதி
யப்பனுனை நெஞ்சி லேகொடு
சுத்தகவி கம்ப நாடன்மு னினிதோதும்
சொற்படி[1]வி ளம்பும் ராமசே
யத்தினெறி னேந்து ளோரது
துப்புடன்வ ரைந்து ளோர்முழு தடைவாகக்
கற்றவரு ணர்ந்து கேள்விகள்
பெற்றவர்மி குந்த வாழ்வொடு
கற்புடைய மங்கை பாலர்க ளுளராகிக்
கட்டுளபு ரந்த [2]ராதியர்
நித்தமும்வ ணங்கு பேரெழில்
கைக்கொடுனை வந்து [3]சேர்வுற அருள்வாயே
உற்றவிடை கொண்ட வீடணர்
பெட்டகம தொன்றி லேதம
துச்சிகொடு வந்து காவிரி யுறுபோதின்
உட்பிரண வங்கொள் கோயிலி
லர்ச்சனை[4]யு கந்த ரூபமு
[5]முத்தமவ ரங்க மேயபி னுலகாளும்
வெற்றிரகு வம்ச வீரர்கள்
பற்றுநக ரின்ச ராசர
[6]மெற்றியுடன் முந்தி யேயெழ மலராளும்

[7]மெச்சுருவ முங்கை யாழியு
நத்துமுற வண்ட ரேதொழ
மிக்குபர்வை குந்த மேறிய பெருமாளே. (97)

[பி-ம்] [1] விளம்பிராமசெ. அ. [2] ராதிகள். அ. [3] சேரவும். அ. யுவந்தருபமொ. அ. [5] டுத்தம. அ. [6] மெத்தி. அ. [7] மெய்ச்சொருப. அ.

வட்ட வாழி தவள சங்கு
முட்ட வாழி திருவி ருந்த
வட்கம் வாழி பெருகு கங்கை துளவேறும்
வைப்பு வாழி கமல வுந்தி
முற்றும் வாழி புயவ லங்கல்
வர்க்கம் வாழி யிடைம டந்தை யுரலோட

கட்டு கோல மணிம ருங்கு
நித்தம் வாழி வரிவி றண்டு
கட்கம் வாழி விரிபு யங்க வணை வாழி
கட்கு லாவு கமல விம்ப
[1]சக்கு வாழி யெனவ னந்த
கற்ப கோடி முழுது நின்று துதிபேணு

எட்டொ ணாத கடலி னின்று
சத்ய லோக மருவி யந்த
விக்கு வாகு நிருபர் கொண்டு வரவேவவந்
திட்ட வூரி லினித மர்ந்து
சுத்த ராமர் தரவி லங்கை
யிற்செல் வீட ணனைய கன்று தமிழாளன்

விட்ட கோல நதிம ருங்கி
விட்ட மாலை புனைய வின்ப
மெத்து பூமி மலர்ம டந்தை களிகூர
மிக்க கோயி லணிய ரங்க
முற்ற தேவ வழகு கொண்ட
மெய்ப்ர தாப முளதெய் வங்கள் பெருமாளே. (98)

[பி-ம்] [1] வட்கம். அ.

புராதன மாகிவி ளங்கு
காரண நீநெறி கொண்ட
புராணமு நீயுயர் கின்ற பொருளேநீ
புராரியு நீமலர் தங்கு
பராபர நீயரு மந்த
புலோமிசை கேள்வனெ னுஞ்சொ லுடையாய்நீ
தராதலம் நீவளை கின்ற
பயோததி நீயிடை துன்று
சராசர நீயுனை யென்று [1]மறவேனே
சரோருக பாதம்வ ணங்கி
மனோகர மாகிவி ளங்கு
தபோதன ஞானம டைந்து சுகியேனோ
இராகவ னாகிந டந்து
விராதனை மூவரை வஞ்ச
விராசத மானைமு னிந்து முக[2]மேலாம்
[3]விராதவ ளோடுக வந்த
மராமரம் வாலியொ டம்பி
னிராசியி ராவண கும்ப கனன்மாள
வராவொரு வாளிது ரந்து
விடாநகர் மேவிய லங்க
லருமுடி சூடிய ரங்க நகர்மேவி
[4]யமோகவ வீடணர் தந்த
விமானவி சாலப்ர சண்ட
வராவணை மீதுது யின்ற பெருமாளே. (99)

[பி-ம்] 1 மறவாதே. அ. 2 மேலாய். அ. 3 இராதவ. அ. 4 யமோக மெய். அ.

யுத்தகாண்டம் முற்றும்.

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

பரதாழ்வான்வைபவம்.

[௯௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

ஸ்ரீபரதாழ்வானைக் கேகயம்போகுமாறு அரசியலாணை கொண்டுபோக்கிய தசரதனுடைய நினைவாலே, அவன் (பரதாழ்வான்) அரசுபுரிதற்குவேண்டும் துணைவலிக்குரிய சுற்றந்தழுவுதலும் பொருளீட்டுந்திறமும் உலகியலொழுக்கவழக்கங்களும் பயிலாதவன் என்றும், கேவலம் வைதிகாசாரமும் கடவுள்வழிபாடுமே பயின்றவனென்றும், இவற்றால் அவன் அரசுபுரிதற்கேற்ற தகுதியற்றவனென்றும் குறிப்பாற்றோன்றுமாறு தசரதன்பேச்சாக,

‘ஆணைநின் றன்முது தாதை யையநிற்
காணிய விழைவதோர் கருத்த னுதலிற்
கேணியில் வளைமுரல் கேக யம்புகப்
பூணெளிர் மார்பனீ போதி யென்றனன்’

என்ற மஹாகவி இங்கு, பரதாழ்வான் அரசுபுரிதற்கேற்ற சிறந்த குணநலங்களும் உடைமையால் ராஜ்யாபிஷேகத்துக்கு இராமனிலும் சிறந்தவன் என்னும் உண்மையை ஸ்ரீராமபிரான்வாயாலும் அவனைப்பெற்ற கௌசலையின்வாயாலும் வெளியிட்டுப் பரதாழ்வான்வைபவத்தை நிலைநாட்டுகிறார்.

இராமன் முடிசூடிவருவனென்றெண்ணியிருந்த கௌசலையிடம் அவன் வனம்புகுதற்கு விடைபெறச்சென்றபொழுது, அவன் முடிசூடாதுவந்ததுகண்டு, ‘நினைந்ததென் னிடையூ றுண்டோ நெடுமுடி புனைதற்’கென்ற கௌசலையைநோக்கி, இராமபிரான்,

‘.........நின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றான்’ என்றான்.

இதனுள், பரதனைப் பத்துமாதஞ் சுமந்துபெற்ற நற்றாயாகிய கைகேசிக்குக் காதற்றிருமகன் என்னாது, அவனுக்கு மாற்றாந்

தாயான கௌசலைக்குக் காதற்றிருமகன் என்றதன் கருத்து: பரதாழ்வான் அநித்தியமான சரீரசம்பந்தமுள்ள உறவுமுறையைக்காட்டிலும் நித்தியமாயுள்ள ஆத்மசம்பந்தமான உறவுமுறையே சிறந்ததென்றுகொள்ளும்மெய்ந்நெறியொழுக்கமுடையவனாதலால் தனக்குப் பரமாத்மாவான இராமபிரானைப் பெற்றிருக்கும் பகவத்ஸம்பந்தம்பற்றி, தன்னையீன்ற தாயினிடத்துச்செய்யும் அன்பினும் பன்மடங்குள்ள அன்பு கௌசலையிடத்துச் செய்பவனானன். அதுகண்டு கௌசலையும் கொண்டகடனைக் குறையாது பெருப்பித்துக் கொடுப்பார்போலே இராமனிடத்துச்செய்யும் அன்பினும் பன்மடங்கு பரதனிடத்துப் பேரன்புசெய்பவளாயினள். அவ்வன்புடைமைபற்றி இராமன் பரதனைக் கௌசலைக்குக் காதற்றிருமகன் என்றான் என்பதாம்.

இக்கருத்தை மஹாகவியே, பின் குகப்படலத்தில், பரதாழ்வான் வாயாலே,

'..வேந்தர்வைகும்
முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு மீன்றானை முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறத்த லாற்றுறந்த பெரியாள்'

என்றமையால் அறியலாம்.

இங்கு, உடற்றொடர்க்குள்ள உறவுமுறைகளைக்காட்டிலும் உயிர்த்தொடர்க்காயுள்ள உறவுமுறையே சிறந்தது: என்று கருதும் மெய்ந்நெறியொழுக்கமுடையான் பரதன் என்பது குறிப்பாற் காட்டப்பட்டது.

இதனால் லௌகிக ஜனங்களிடத்தில் இவனுக்குத் தன்னலங் கருதியபட்சபாதமில்லாத சமதர்சநமுண்டென்று காட்டியவாறுமாயிற்று.

இனி, பரதனை அரசியன்முறைபுரிதற் கேற்ற சிறந்த குணமுடையோனென்று கூறக்கருதிப் 'பங்கமில்குணத்தான்' என்கிறான்.

குணங்களுக்குப் பங்கமாவது: பகை நொதுமல் நட்பு என்னும் முத்திறத்தார்மாட்டும் ஒத்தியலாமை.

அங்ஙனம் அம்முத்திறத்தார்மாட்டும் ஏற்றத்தாழ்வின்றி ஒத்தியலுதற்குரிய குணம் நடுவுநிலைமையாதலால் அதனைப் 'பங்கமில்குணம்' என்றானென்க.

இதனையே இன்னும் சிறிதுவிளங்கவைப்பாராய்ப் பின்பு கவி இவற்றின் தொகைக்குறிப்பால் 'மும்மையின் நிறைகுணம்' என்பர்.

அரசநீதிநடத்துவார்க்கு இன்றியமையாத குணமான இந் நடுவுநிலைமையால் பரதாழ்வான் மிகவும் சிறந்தோன் என்பது தோன்ற அவனைப் 'பங்கமில்குணத்தான்' என்றான்.

இதனால், பரதாழ்வான், அகப்பற்றும் புறப்பற்றும் அற்றவனாதலால், அவனிடம் நடுவுநிலைமையென்னும் பங்கமில்குணம் இயல்பானமைந்தது என்று, அவன் அரசனாய் முடிசூடி முறை செய்துகாத்தற்குரிய தகுதிகூறியவாறு.

'எம்பி' என்றது தான் அரசனாவதிற்காட்டிலும் தகுதியுடையவனாயும், தனக்கு அடியானாயுமுள்ள தம்பி முடிசூடி அரசனாய்த் தன்னடிபணியப்பெறுவது மிகவும் உயர்ந்ததன்றோ? என்று தன் மகிழ்ச்சி காட்டியபடி.

'பரதனே துங்கமாமுடி சூடுகின்றான்' என்றதன் கருத்து: அவன் முடிசூடுதலையே நான் விரும்பியிருந்தேன்; அது, தானே நிறைவேறிவிட்டது என்று,தன்மகிழ்ச்சி காட்டினான்: என்பதாம்.

இவ்வாறு தன்மகிழ்ச்சிதோன்றக்காட்டி, கௌசலையின் கலக்கந்தீர்ப்பான்கருதிக் கூறிய ராமாபிப்பிராயத்தாலே பரதாழ்வான் வைபவம் சொல்லப்பட்டது.

இனி, கௌசலைவாயாலும் அவள் கலக்கந்தீர்ந்து, மனமகிழ்ச்சியுடையவளாய்ப் பரதாபிஷேகத்தின்சிறப்புக்கூறுமுகத்தாலே பரதாழ்வான்வைபவம் கூறக்கருதிய மஹாகவி,

'முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறை குணத்தினன், நின்னினும் நல்லனால்
குறைவிலன், எனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்'

என்கிறார்.

இதனுள், "'முறைமையன்று' என்பது ஒன்று உண்டு" என்றதன் கருத்து: 'மூத்தவன் இருக்க, இளையவன் முடிசூடுதல் அடிப்பட்ட வழக்கன்று' என்று உலகத்திலுள்ள சாமானிய ஜனங்கள்

சொல்லும் பயனற்ற சொல் ஒன்றே பரதாபிஷேகத்தை மறந்து ராமாபிஷேகத்தை நாட்டக்கருதுவார் கூறுதற்குரிய போலிக் குற்றம்; இது பரதபட்டாபிஷேகத்துக்குக் குற்றமாகமாட்டாது என்பதாம்.

இங்கு, 'முறைமையன்று' எனத் தன் பேச்சாகப் பேசியொழியாது, 'முறைமையன்று' என்பது என்று (சப்தா நுகாரத்தால்) பிறர் பேச்சு என்னும் கொண்டுகூற்றாலே கூறியதனால், அது, பரபக்ஷத்தார்பேச்சு என்பதும், வயதின்மூப்பு அரசியல்நடத்தற்குச் சிறந்த காரணமாகாமையால் அது தனக்கு உடம்பாடன்று என்பதும், 'உரைமுடிவு காணுன் இளமையோன் என்ற, நரைமுது மக்கள் உவப்ப-நரைமுடித்துச், சொல்லால் முறைசெய்தான் சோழன்' என்பதனால் அதற்குரிய தகுதியே வேண்டுமென்பதும் காட்டியவாருயிற்று. **இதனால்,** பிறர்கோள் மறுக்கப்பட்டது.

இனித் தன் றுணிபுகூறத்தொடங்கி, 'மும்மையின் நிறைகுணத்தினன்' என்கிறுள்.

ஈண்டு மும்மை என்றது பகை நொதுமல் நட்பு என்னும் முத்திறவேறுபாடுகளாம். அவற்றில் நிறைகுணமாவது: செங்கோல் வேந்தர்க்கு இன்றியமையாத நடுவுநிலைமையென்னும் சிறந்த குணமாம். அக்குணமுடைமையால் அவன் அரசியன்முறைபுரிதற்குச் சிறந்த தகுதியுடையவன் என்பதாம்.

இது, "பங்கமில்குணத்தெம்பி" என்று இராமன்கூறிய பரதகுணவிசேஷத்தைக் கௌசலை தானும் அறிந்துள்ளமை தோன்ற விவரித்துக்கூறியவாறு.

'நின்னினும் நல்லன்' என்பது நீ ஸ்வதந்திரனுயும், உன்னை நியமிக்கும் பரனொருவனில்லாதவனுயும், உன்னையடைந்தாரிடத்து உனக்குள்ள அபிமானத்தால் அவர் பிழைகளைப் பாராதவனுயுமிருத்தலால், ஒரோவழி நடுவுநிலைமையொழிந்து, நீ வேண்டியவாறு இறைபுரியவும்வல்லை; பரதன் பகவத்பாதந்த்ரனுயும், அவனை நியமிக்கும் பரனொருவனையுடையவனுயும், ஒருவரையும் என்னவர் என்று எண்ணுதவனுயும் இருத்தலால் தன்னலங்கருதாதவனுய் நடுவுநிலைமைசிதையாமல் இறைமுறைபுரிதற்கு உரியன்;

ஆதலால் உலகத்தார்க்கெல்லாம் அவன் நின்னினும் நல்லன் என்பதாம்.

இங்கு, 'நடுவுநிலை திறம்பிய நயமில் ஒருகை' என்னும் பரிபாடல் (3–34) சான்றும் என்பது கவிகருத்து.

இது, அமுதமெழக் கடல்கடைந்த தேவரும் அசுரருமான இருதிறத்தாரிடையே நடுவுநிலைதிறம்பித் தன்னையடிபணியும் தேவர்க்கு அமுதளித்து, அடிபணியாத அசுரர்க்கு அமுதளியா தொழிந்த ஆதிமூர்த்தியின்செயலைக் கவி நினைந்து குறிப்பாற் காட்டியவாறு.

இங்ஙனம் கிளவிக்குரியோர்கூற்றினுள், கவிகருத்தைப்புகுத் துக்கூறுதலும் உண்டு. இதனை, திருக்கோவையாருள், 'ஈசற்கியான் வைத்த அன்பின் அகன்று' எனவும், 'அவன் வாங்கிய என் பாசத்திற் காரேன்று' எனவும், 'அவன் பூங்கழல் யாம் பேசு அத்திருவார்த்தையிற் பெருநீளம்' எனவும் கவிகருத்துப் பயின்றுவந்தமை காண்க. இவ்வாறே பிறர்கூற்றுள் கவிகருத்துப் பயின்றுவருதல் பல இடங் களிற் காணலாம்.

அன்றியும், எனக்கு நீ நல்லை; நின்னிலும் அவன் எனக்கு நல்லன் என்பதுமாம். இதற்கு அடி என்னெனின் நீ எனக்குத் திருமகளும்நிலையில் நல்லை; அவன் காதற்றிருமகளும்நிலையோடு எனக்குத் தொண்டனும்நிலையாலும் நல்லன் என்பதாம்.

மேலும், உனக்கு நீ நல்லை; உன்னிலும் அவன் உனக்கும் நல்லன் என்பதுமாம். இதனால் நீ ஒரோவழித் தற்காப்பிற் பரா முகமாய் உனக்கு நன்மைவிளைத்துக்கொள்ளாதிருக்கவும் கூடும். இவன் உனக்கு ஒருவாற்றானும் கேடுநிகழாதபடி உன்னையே மிகவும்பேணி நன்மையே விளைப்பன் என்பது குறிப்பாயிற்று.

'குறைவிலன்' என்றது உன்னை மந்தரைபோல்வார் சிலர், தீயன் என்றும், பெண்ணொடு போர்செய்தோன் என்றும் குறை கூறுவர். பரதன் அவ்வாறு ஒருவராலும் ஒருகுறையும் கூறப் படான்: என்பதாம்.

இவற்ருல், மும்மையின் நிறைகுணத்தவன், என்பதற்கு இரட்டுறமொழிதலால், நடுவுநிலைமையும் நின்னினும்நன்மையும் குறைவின்மையுமாகிய மூவகையாலும் சிறந்தவன் பரதன் என்பதுமாம்.

அன்றியும், பரதராஜ்யாபிஷேகவிஷயத்தில் 'முறைமையன்று' என்று பிறர் சொல்லும் குற்றம் ஒன்றேயுள்ளது, அதின் மும்மடங்கு குணமுள்ளது; ஆதலால் 'குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்—மிகைநாடி மிக்க கொளல்' என்னும் முறைபற்றிப் பரதன் அரசுரிமை எய்தச் சிறந்தோன் என்ருள்: என்பதுமாம்.

இனி இவ்வாறு பேசியவள், தன் காதற்றிருமகனுன பரதன் மாட்டுள்ள பேரன்புபற்றிப் பேசினுளல்லள் என்பார், 'நால்வர்க்கும் மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினுள்' என்கிருர். இதன்கருத்து, இராமன், 'நின்காதற்றிருமகன்' என்றதற்கிணையப் பரதனிடத்துத் தனக்குள்ள பேரன்பினுல் இங்ஙனம்சொன்னுளல்லள். அவ்வன்புபற்றிக்கூறில் அது நடுவுநிலைநீங்கிய அன்பாதலால் அவ்வன்பு மறுவுடையதாகும். இங்கு நடுவுநிலைமையோடுகூடிய பொதுவான அன்புடைமைகொண்டு கூறுதலால் இவ்வன்பு மறுவில்லாத அன்பாயிற்று. இவ்வன்புடைமையால் இராம பரத லக்ஷ்மண சத்துருக்நர் என்னும் நால்வரிடத்தும் வேற்றுமையில்லாதவளாய்க் கூறினுள் என்பதாம்.

இவ்வாருக, இராமன் முடிசூடாமைபற்றிக் கவலாமலும், பரதனிடத்துப் பேரபிமானம் கொள்ளாமலும், நால்வர்க்கும் ஒத்த நடுவுநிலைமைகொண்ட மறுவிலன்புடையளாய் நின்று பேசிய கௌசலைபேச்சாலும், ராமாபிப்பிராயத்தோடு பொருந்தியதாகவே பரதாழ்வான்வைபவம் காட்டியவாருயிற்று.

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.